Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!
மகாராசி சில்க்ஸ்

சல்வார் கிற்
இந்தியன் சாறி வகைகள்
மற்றும் சிறுவர், சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 12 (04.02.2004) புதன்கிழமை இதழ் :126

## கடும் நிபந்தனைளுடன் வைகோவுக்கு பிணை!

(சென்னை)



பூந்தமல்லி பொடா நீதி மன்றம் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு கடும் நிபந்தனைகள் அடங்கிய பிணை வழங்கி, நேற்று தீர்ப்பு வழங்கியது. இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக வைகோ உறுதிமொழி தந்தால் மட்டுமே இந்த பிணை அமுலுக்கு வரும் எனவும் நீதிவான் ராஜேந்திரன் கூறினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தினமான இன்று கறுப்பு நாளாக அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 56 ஆவது சுதந்திர தினத்தை பகிஷ்கரித்து கறுப்பு நாளாக அனுஷ்டிக்கும்படி யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரச திணைக்களங்கள், வர்த்தக நிலையங்கள், கூட்டுறவு நிலையங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் கல்விநிலையங்கள் ஆகியனவற்றில் கறுப்பு கொடிகளைக் கட்டியும் அவற்றை மூடியும் சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழமுடியவில்லை என்பதை சிங்கள அரசியல் தலைவர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெரியப்படுத்த மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரதின அணிவகுப்பில் நவீன ஆயுத தளபாடங்கள்!

(கொழும்பு)

இலங்கையின் 56 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு, சுதந்திர சதுக்கத்தில் பிரமாண்டமான நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு, காலை 9.31 இற்கு தேசியக் கொடியை ஏற்றிவைப்பார்..

ஜனாதிபதி சந்திரிகாவின் சுதந்திரதின உரையைத் தொடர்ந்து இராணுவ அணிவகுப்பும், கலாசார நடனங்களும் இடம்பெறும். இராணுவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு சந்திரிகா முடிவு!

## இணையத் தளத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்திருப்பதாக நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்களை ஆதாரம் காட்டி இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஜே.வி.பி மற்றும் கிறிஸ்தவ அடிப்படைவாதிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்தே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.**

இது குறித்து மேலும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு பொருத்தமான மூன்று நாட்களை சோதிடர்கள் கணித்துக் கொடுத்துள்ளனர். இவற்றுள் மிகவும் பொருத்தமான நாளாக எதிர்வரும் 7 ஆம் திகதியை ஜனாதிபதி தெரிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா தற்போது இரண்டு முக்கிய தரப்புக்களின் அழுத்தங்களை எதிர்நோக்கி வருகிறார்.

ஜே.வி.பியை பின்புலமாகக் கொண்ட அனுரா பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் நாடாளுமன்றைக் கலைக்க வேண்டுமெனக் கோரி ஜனாதிபதி சந்திரிகாவை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தடைப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகள்; தாய்லாந்து பிரதமருடன் ரணில் பேசுவார்!

(கொழும்பு)

## யு.எஸ்.எயிட் உயரதிகாரி யாழ்ப்பாணம் வரவுள்ளார்!

(கொழும்பு)

யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் ஆசியப் பிராந்திய பிரதி உதவி நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் மார்க் எஸ்வேர்ட் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து இங்கு மேற்கொள்ளப்படும் உதவித்திட்டங்கள் குறித்து ஆராயவுள்ளார்.

சர்வதேச உதவிக்கான அமெரிக்க நிறுவனத்தின் (யு.எஸ்.எயிட்) தெற்காசியப் பிராந்தியங்களின் அதியுயர் அதிகாரியான மார்க் எஸ்வேர்ட் அண்மையில்தான் புதிதாக இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நான்கு நாட்கள் இலங்கையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திலிருந்து 33 பேர் நெடுந்தீவை வந்தடைந்தனர்!

(நெடுந்தீவு)

தமிழகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த 33 பேர் நேற்று நெடுந்தீவை வந்தடைந்தனர்.

இராமேஸ்வரத்திலிருந்து படகு ஒன்றின் மூலமாக 14 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர்,

## அத்துருகிரிய மறைவிட விவகாரம்; நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம்!

(கொழும்பு)

அத்துருகிரிய இராணுவ மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டிருப்பதாக - சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்ற அவைத் தலைவர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார கடந்த மாதம் நாடாளுமன்றில் தெரிவுக்குழு வொன்றை அமைக்க வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தார். அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதையடுத்தே, சபாநாயகர் நேற்று நாடாளுமன்ற விசாரணைக்குழுவை நியமித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரம் மோதி அரியாலையில் சிறுவன் பலி

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் உழவு இயந்திரம் மோதியதில், சைக்கிளில் சென்ற சிறுவன் ஒருவன் உயிரிழந்தார்.

## தமிழகத்திலிருந்து 33 பேர் நெடுந்தீவை வந்தடைந்தனர்!

(நெடுந்தீவு)

தமிழகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த 33 பேர் நேற்று நெடுந்தீவை வந்தடைந்தனர்.

இராமேஸ்வரத்திலிருந்து படகு ஒன்றின் மூலமாக 14 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர், நேற்று நெடுந்தீவுக்கு திரும்பினர். இவ்வாறு திரும்பியவர்களில் நெடுந்தீவைச் சேர்ந்த 12 பேரும், அனலைதீவைச் சேர்ந்த ஒருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருபது பேரும் அடங்குவர்.

இவர்களில் நெடுந்தீவைச் சேர்ந்த 12 பேரும் விசாரணைகளின் பின் தமது சொந்த வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அனலைதீவு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள், நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அதிபரின் விருந்தில் இலங்கையிலிருந்து பிரமுகர்கள்!

(வொஷிங்ரன்)

அமெரிக்க அதிபரால் வருடாந்தம் நடத்தப்படும் காலை உணவின் பின்னரான கூட்டத்திற்கு இலங்கையிலிருந்தும் முக்கிய பிரமுகர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபரால் வருடாந்தம் நடத்தப்படும் இந்தக் கூட்டம், நாளை வொஷிங்ரனில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு சகல நாடுகளிலிருந்தும் அரசியல்வாதிகள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் மதத் தலைவர்கள் போன்றோர் அழைக்கப்படுவது வழமையாகும்.

இந்தவகையில் இலங்கையிலிருந்து அழைக்கப்பட்ட முக்கிய பிரமுகர்களில் நீதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தடைப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகள்; தாய்லாந்து பிரதமருடன் ரணில் பேசுவார்!

(கொழும்பு)

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு அடுத்த வாரம் தாய்லாந்து செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தாய்லாந்து பிரதமர் தக்ஷின் சினவத்ராவுடன் - விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் தடங்கல்கள் தொடர்பாக பேச்சுக்களை நடத்துவார்.

இந்தத் தகவலை தாய்லாந்தின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இதேவேளை, நின்றுபோயுள்ள சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு தாய்லாந்து அரசாங்கம் தன்னாலான முயற்சிகளைச் செய்யுமென அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சரான சிகாசகீ புகன்சென்ஹேவ் தெரிவித்தார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி தாய்லாந்து செல்லும் பிரதமர் ரணில், அந்த நாட்டுடன் விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் கையெழுத்திடவுள்ளார்.

அத்துடன், இரு நாட்டு வர்த்தகத்தை விரிவாக்குவது தொடர்பாக பேச்சுக்களை நடத்தலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கிருஷாந்தி கொலை வழக்கு

# இராணுவத்தினர் ஐவருக்கும் மரணதண்டனை ஊர்ஜிதம்!

(கொழும்பு)

மாணவி கிருஷாந்தி குமாரசாமி உட்பட நான்குபேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தினருக்கு மேல்நீதிமன்றம் விதித்த தண்டனையை உயர்நீதிமன்றம் நேற்று உறுதி செய்தது.

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கிருஷாந்தி குமாரசாமி உட்பட நான்குபேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னர் மேல்நீதிமன்றததால 5 இராணுவத்தினருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இவர்கள் உயர்நீதிமன்றத்தில் தமது மரணதண்டனையை மீள்பரிசீலனை செய்யுமாறு மேன்முறையீடு செய்திருந்தனர்.

இந்த முறையீடு தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கின் போது இந்த 5 பேருக்கும் வழங்கப்பட்ட மரணதண்டனை உறுதிப்படுத்தப்பட்டது.

## அரியாலையில் சிறுவன் பலி

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் உழவு இயந்திரம் மோதியதில், சைக்கிளில் சென்ற சிறுவன் ஒருவன் உயிரிழந்தார்.

நேற்றுக்காலை அரியாலை இலந்தைக் குளம் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த பூலோகராஜா ஜேம்ஸ் (வயது 12) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மண் ஏற்றிக்கொண்டுவந்த உழவு இயந்திரம் மோதியதிலேயே, இந்தச் சிறுவன் சிறுவன் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவனின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (111)

## இனந்தெரியாதோரால் யுவதி கடத்தப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)

கச்சேரிப்பகுதியில் வீதியால் சென்றுகொண்டிருந்த யுவ்தி ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டார்.

நேற்றுமதியம் கச்சேரி - நல்லூர் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சைக்கிள் ஒன்றில் வந்துகொண்டிருந்த யுவதியை கார் ஒன்றில் வந்த இனந்தெரியாத கோஷ்டி ஒன்று கடத்திச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடத்துவதற்காக வந்த காரில் நான்கு பேர் வரை இருந்ததாக சம்பவத்தை நேரில் கண்ட அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக யுவ்தியின்

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297

071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போஏயார்

EXPOAIR

வான் வெளியில் உங்கள் நண்பன்...

your friend in the skies...

# சுதந்திரதினத்தைப் புறக்கணிக்கக்கோரி குடாநாட்டு பொது அமைப்புகள் அறிக்கை!

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் 56 ஆவது சுதந்திரதினமான இன்று குடாநாட்டில் மக்கள் தமக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பரவலாக எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவுள்ளனர்.**

**குடாநாடெங்கும் கறுப்புக் கொடிகள் கட்டி சுதந்திரதினத்தை கரிநாளாக அனுஷ்டிப்பதுடன், இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ளமையால், சொந்த இடங்களுக்குச் சென்று மீள்குடியமர முடியாதுள்ளமையைச் சுட்டிக்காட்டி வலி.வடக்கு மற்றும் தென்மராட்சி மக்களும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.**

இதற்கு ஆதரவு தெரிவித்து யாழ். குடாநாட்டிலுள்ள பொது அமைப்புக்களும், அரசியற் கட்சிகளும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. அவற்றில் நேற்று வெளியான அறிக்கைகளுடன் மேலும் சில அறிக்கைகள் வருமாறு -

## மாவை சேனாதிராசா விடுத்துள்ள அறிக்கை

இலங்கைக்கு சுதந்திரம் என்பது சிங்களதேச மக்களுக்கு மட்டுமே என்பதைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக அறிந்திருக்கிறோம்.

அடக்குமுறைக்கும், இன ஒடுக்குமுறைக்கும் எதிராகவும், தமிழ்தேச விடுதலைக்காகவும் கடந்த இருபதாண்டுகளாக ஆயுதப் போராட்டம் நடைபெற்றுவந்துள்ளது. பேரழிவுகளைச் சந்தித்திருக்கிறது இந்த நாடு.

அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தமொன்றைச் செய்துள்ளது. சென்ற இரண்டு ஆண்டுகளில் சர்வதேச அளவில் பல மாநாடுகளில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எட்டுவதற்கான அடித்தளங்கள் இடப்பட்டுள்ளன.

அதன் பெறுபேறாகப் போரினால் அழிந்துபோன தமிழ்த் தேசத்து மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும், இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்கும் ஐரோப்பிய யூனியன், ஜப்பான் உள்ளிட்ட சர்வதேச நாடுகள் பெருமளவு நிதி உதவிகளை வழங்க உறுதியளித்தன. அந்த நிதியைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக தமிழீழ தேசத்தில் இடைக்கால அதிகார அரசமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கான பேச்சுவார்த்தையும் இடம்பெறவிருந்தது. இதனால்- தமிழ்த் தேச மக்களிடத்திலும், ஏன் சிங்கள மக்களிடத்திலும், சர்வதேசத்திலும் ஒரு புதிய நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

ஆனால், இலங்கையின் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதில் தென்னிலங்கை ஆட்சியாளர் ஒன்றுபட்டு குதூகலித்து நிற்கின்றனர். இந்தச் சுதந்திர தினக் கொண்டாட்டம் - தமிழ்த்தேசத்தின் ஆட்சியுரிமையை அடக்குவதாகவும், ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மூலம், எம்மினத்தை ஒடுக்குவதாகவும், எம்மின எழுச்சியை அழிப்பதாகவும் உள்ளது.

ஆகவே, அனைத்து தமிழ் அரசியல் சக்திகளும் இத் தமிழின எழுச்சியுடன் சங்கமித்து தமிழ்த்தேசத்தில் பேரின்வாத ஆக்கிரமிப்பு அகலவும், தன்னாட்சி உரிமை நிலைநாட்டவும் ஒத்துழைக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகள் சம்மேளனம்

தென்மராட்சி தெற்கில் - தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி வடக்கு பகுதிவாழ் மக்கள் இடம்பெயர்ந்து கடந்த 4 வருடங்களுக்கு மேலாக அகதி வாழ்வில் உள்ளனர். உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி இந்தப் பகுதிகளில் இதுவரை மீளக்குடியமர அனுமதிக்கவில்லை. எனவே, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இன்றுமுதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவுள்ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வலி. கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசம்

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து அரைநூற்றாண்டு கடந்துவிட்டது. அன்று தொடக்கம் பேரினவாதம் தன் சுயரூபத்தைக் காட்ட பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பெரும்பான்மை என்கின்ற ஆயுதத்தையும், சிறுபான்மையினரைப் பிரித்தாளுகின்ற தந்திரோபாயத்தையும் பயன்படுத்தி இன, மத பேதங்களை வளர்த்துக் கொண்டு வந்திருக்கின்றன. இலங்கை அரசியல் யாப்பில் 29 ஆவது சரத்தை நீக்கி, புதிய ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கான பிரகடனத்தைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பில், சிறுபான்மையினருடைய நலன்கள் பேணப்படும் வகையில் அது அமைந்திருக்கவில்லை.

காலத்துக்குக் காலம் தமிழ் பேசும் மக்கள் சிங்கள அரசாங்கங்களுடன் அவ்வப்போது ஒப்பந்தங்கள் செய்யப்பட்டும், அவை கிழித்தெறியப்பட்டன.

புலிகளும் - அரசாங்கமும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தபின்னர், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இரண்டு வருட காலத்தில் அரசாங்கம் ஒப்பந்தத்தை சரிவர நிறைவேற்றவில்லை. அவசர கால நிலையின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட உயர்பாதுகாப்பு வலயங்கள், அவசரகால நிலைமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் தொடர்ந்து இருப்பது சட்டவலுவற்றதும், நீதிக்குப் புறம்பானதுமாகும்.

எந்த வகையில் பார்த்தாலும் சமாதான முயற்சிக்கான கடைசிச் சந்தர்ப்பம் இதுவென்பதையும், இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டால் உலக நாடுகளில் இன்று உருவாகியிருக்கும் சார்புநிலைத் தன்மையை மறுபடியும் உருவாக்குவது கடினமாக இருக்கும். தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று நிற்கும் சிங்கள பொதுமக்கள், புத்திஜீவிகளையும் அனைத்து ஒரு வெகுஜனப் போராட்டத்தை பேரினவாதத்துக்கு எதிராக உருவாக்கவேண்டியது அவசியமாகும்.

ஆனால், தற்போதைக்கு இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து வாழும் மக்கள் - இலட்சக்கணக்கான குடும்பங்கள் தம் சொந்த இடத்துக்குச் செல்லமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்தநிலையில், தமிழ்பேசும் மக்கள் சுதந்திரத்தைக் கொண்டாட வேண்டுமா? காலத்துக்குக் காலம் பகிஷ்கரிப்பு இடம்பெற்ற வரலாறுகள் உண்டு.

ஆகவே, எமக்கு நிரந்தரமான சுதந்திரம் கிடைக்கும்வரை இலங்கையின் சுதந்திரதினத்தைப் பகிஷ்கரிப்பதோடு, எமது சுதந்திரத்துக்கான போராட்டத்துக்கு வலுச்சேர்க்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்

இராணுவ நடவடிக்கைகளினால் புலம்பெயர்ந்துள்ள வலி.வடக்கு மக்கள் - உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றி தங்களை மீளக்குடியமர படைத்தரப்பு அனுமதிக்கவேண்டுமெனக் கோரி, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை இன்று முதல் ஆரம்பிக்கவுள்ளனர்.

வலி. வடக்கு மக்கள் புலம்பெயர்ந்து சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். உயர்பாதுகாப்பு வலயம் என்பதால், இந்த மக்கள் மீளக்குடியமர படைத்தரப்பினர் அனுமதி மறுத்து வருகின்றனர். இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

தமது கோரிக்கைகளை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை இன்று தொடங்குகின்றனர். இதற்கு அனைத்து பொது அமைப்புக்களும், பொதுமக்களும் ஆதரவு வழங்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**திருநெல்வேலி பழங்கிணற்றடி**

**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்**



2004 ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 05.02.2004 வியாழக்கிழமை கொடியேற்றம் பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

10ம் திருவிழா - மஞ்சம் - 14 ம் திகதி - சனிக்கிழமை
12ம் திருவிழா - கயிலாயவாகனம் - 16 ம் திகதி - திங்கட்கிழமை
14ம் திருவிழா - சப்பறம் - 18 ம் திகதி - புதன்கிழமை
15ம் திருவிழா - தேர் - 19 ம் திகதி - வியாழக்கிழமை
16ம் திருவிழா - தீர்த்தம் - 20 ம் திகதி - வெள்ளிக்கிழமை
21ம் திகதி சனிக்கிழமை பகல் அன்னதானம்
மாலை - தண்டிகை உற்சவம்
22ம் திகதி - ஞாயிற்றுக்கிழமை - வயிரவர் உற்சவம்

பிரசுர அன்பளிப்பு
கனகா பத்திரிகை விற்பனை நிலையம்
இல. 6 - பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி

(சி-2205)

**College of Information Technology (CIT)**

சிவன் வீதி, ஆவரங்கால், புத்தூர்

T.P:- 0777 -589703 E-mail:- avarangalcit@yahoo.com

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன -

**Ms Office**

100% செய்முறை வகுப்புகள்

பிரிவு I சனி, ஞாயிறு 8.30 - 10.30 A.m
பிரிவு II செவ்வாய், வியாழன் 4.00 - 6.00 P.m
பிரிவு III செவ்வாய், வியாழன் 7.00 - 9.00 P.m
பிரிவு IV திங்கள், வெள்ளி 7.00 - 9.00 P.m
(உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

- DTP பிரிவுI :- திங்கள், வெள்ளி 8.00 - 10.00A.m
  பிரிவுII :- சனி, ஞாயிறு 11.30 - 1.30 P.m
- Diploma in Computer Studies
- Diploma in Computer programming
- Certificate Courses

Java, Turbo C++, Visual Basic, Computer Hardware, Web design (HTML), Coreldraw, Adobe photoshop, Adobe Pagemaker, Ms - Excel, Ms - Word, Ms - Access

OTHER SERVICES
- Sales for Computer & parts
- Computer repairing
- Networking (LAN)
- Software development
- Ronio work

Basic English Courses
(Grammar& Spoken English Practice)
Intermediate English Courses
(Grammar & Written & Spoken English Practice & Translation Practices)
பிரிவு I சனி, ஞாயிறு 12.30 - 2.30 P.m
பிரிவு II சனி, ஞாயிறு 7.00 - 9.00 P.m
(உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

- Special Children program (Age 3 to 18)

இயக்குநர்

(612)

**eTouch COMPUTER SYSTEM**

" The right way to touch IT "

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.

T.P. :- 0214 - 590222 E - mail :-etouch@wow.lk

மிகவும் குறைந்த கட்டணத்தில் வார, வார இறுதி, மாலைநேர (4.00 p.m to 7.00 p.m) வகுப்புக்கள் ஆரம்பம்..

| COURSE NAME | COURSE FEES | DURATION |
|---|---|---|
| Diploma in pc handling | FREE | 6 weeks |
| Diploma in Microsoft office | 1500/= | 3months |
| Diploma in Information Technology | 1500/= | 3months |
| Diploma in Multimedia | 2000/= | 3months |
| Diploma in Desktop publishing | 2000/= | 3months |
| Diploma in Engineering Drawing | 2000/= | 3months |
| Diploma in Computer programming | 2000/= | 4months |
| Diploma in Computer Hardware | 2500/= | 4months |
| Sri Lanka Computer Driving Licence | 3000/= | 4months |

**REGISTRATION FEES 1100/=**

- புதிதாக கணனி வாங்கிய ஒவ்வொருவரும் ஒரே மாதத்தில் கணனி பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் Diploma inpc Handling (Online Class) பதிவுக் கட்டணம் மட்டுமே அறிவிடப்படும்!!!
- GIT பாடவிதானத்தை உள்ளடக்கி பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர (3.30 to 4.30) கற்கைநெறி - Diploma in Information Technology.
- இலங்கை அரசினால் நடத்தப்பெறும் கணனியில் தேசிய பயிற்சி சான்றிதழிற்கான (Sri Lanka Computer Driving Licence - SL CDL) வகுப்புக்கள்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 05.02.2004**
**காலை 10.00 மணி**

Director

# கண்ணிவெடிகளை அடையாளம் காட்டக்கூடிய புதிய இனச் செடிவகைகள் அறிமுகப்படுத்தப்படும்!

## பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

கண்ணிவெடிகளை அடையாளம் காட்டும் ஆற்றலுடைய புதிய இனச் செடி வகைகளை அறிமுகப்படுத்த பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கண்ணிவெடி புதைக்கப்பட்டிருக்கும் இடத்தை அடையாளம் காட்டக் கூடிய ஆற்றலுடைய செடி வகையொன்றை டென்மார்க்கிலிருந்து பெற்று இலங்கையில் அறிமுகப்படுத்த பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இச்செடிகளின் விதைகளை நிலத்தில் தூவினால் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் வளரும் செடிகள் சிவப்பு நிறத்திலும், ஏனைய இடத்தில் வளரும் செடிகள் இயற்கையான பச்சை நிறத்திலும் வளரும் ஆற்றல் கொண்டவை என தெரிவிக்கப்படுகின்றது.

கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளில் காணப்படும் கந்தகத்தின் தாக்கத்தினால் இந்தச் செடிகள் சிவப்புநிறமாக மாறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடிகள் இருக்கும் என்று சந்தேகிக்கப்படும் இடங்களில் இச்செடிகளின் விதைகள் விமானங்கள் மூலம் தூவப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச்செடி கடும் வரட்சியிலும் வளரக்கூடியதாக இருப்பதாலும், தெளிவான நிற வேறுபாட்டினை காட்ட வல்லதாக இருப்பதாலும் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் இருக்கும் இடத்தினை இலகுவில் கண்டுபிடிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மாகாண முதலமைச்சர் பதவிக்கு ஐ.தே.க.பேச்சாளர்!

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும், காலிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜந்த கருணாதிலக - மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகத் தீர்மானித்துள்ளார்.

தென்மாகாணசபையின் முதலமைச்சர் பதவிக்கே இவர் போட்டியிடவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. தென்மாகாண சபையின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூன்மாதமே முடிவடையவிருக்கிறது.

ஆனால், மாகாணச்சபை திருத்தச்சட்டத்தின் மூலம் அனைத்து மாகாண சபைகளையும் கலைத்து விட்டு ஒரேநாளில் தேர்தலை நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்திலிருந்து தப்பியோடியோர் மீண்டும் சேவையில் இணைய வாய்ப்பு

இராணுவத்திலிருந்து தப்பியோடிய படையினரை மீண்டும் சேவையில் இணையக்கூடிய வாய்ப்பினை வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதியோடு இராணுவத்திலிருந்து தப்பியோடி மூன்று வருடங்கள் நிறைவடைந்த படையினருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் ஆரம்ப இராணுவப் பயிற்சிகளைப் பெற்று சேவையிலிருந்து தப்பிச்சென்ற பயிலுனர்களுக்கு சட்ட ரீதியாக விலக வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் நடவடிக்கை தலைமைச் செயலகம் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி சேவையிலிருந்து சட்ட ரீதியாக விலக விரும்புகின்ற நபர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதிவரை களுத்துறை மாவட்ட செயலகத்தில் தங்களது சட்ட ரீதியான விலகல்களை மேற்கொள்ளலாம் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பரீட்சை ஆணையாளர் - இளங்குமரன் சந்திப்பு!

இலங்கை பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யு.ஏ.மஹிந்த விஜயசிறி தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரனைச் சந்தித்து இரு மணிநேரம் கலந்துரையாடினார்.

கிளிநொச்சியில் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரனையும் வன்னி மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார்.

ஆணையாளருடன் பிரதி பரீட்சை ஆணையாளர் போல் அன்ரனி, முன்னாள் பிரதி பரீட்சை ஆணையாளர் குலதுங்க ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்கள்.

## மனோ-மலிக் யோசனைகளின் பதிலை ஜனாதிபதியிடமிருந்து எதிர்பார்க்கிறேன்!

### பிரதமர் ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது தொடர்பாக நியமிக்கப்பட்ட மனோ-மலிக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட யோசனைகள் அடங்கிய அறிக்கை தொடர்பான ஜனாதிபதியின் பதிலை தாம் எதிர்பார்த்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

குறிப்பிட்ட அறிக்கையின் பிரதிகள் தமக்கும், ஜனாதிபதிக்கும் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இரு வருடங்களுக்கான நிர்வாகம் தொடர்பான அறிக்கையினை தயாரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இந்த அறிக்கை தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாடு தொடர்பாக இதுவரை தமக்கு அறிவிக்கப்படவில்லையென்றும் பிரதமர் தெரிவித்தார்.

மேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஐக்கி தேசியக்கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் பேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மனோ-மலிக் குழுவினரின் பேச்சுவார்த்தைகள் குறித்து விரிவாக விளக்கினார்

அடுத்த இரு வருடங்களுக்குள் இணக்கப்பாட்டுடன் இரு தரப்பும் சேவையாற்றக்கூடிய பல சரத்துக்கள் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் உட்படுத்தப்பட்டிக்கின்றது.

அத்துடன் அறிக்கையில் குறிப்பிடப்படாத சில விடயங்கள் குறித்தும் இரு தரப்பும் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்தல், அரசியல் செயற்பாடுகள் மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தல் ஆகியன குறித்து இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சு தொடர்பாக இதுவரை இறுதித்தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை,

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொது இணக்கப்பாட்டுத் திட்டங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்காமல் தாம் பாதுகாப்பு அமைச்சைக் கோரியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்ற பிரச்சாரங்கள் தொடர்பாக சந்தேகங்கள் எழுந்திருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்தக்குழுவில் உறுப்பினரான பிரட்மன் வீரக்கோன் இந்தக்காரணங்களுக்கு புறம்பாக மேலதிக பத்திரமொன்றை குழுவின் கவனத்திற்காக தயாரித்திருப்பதாகத் தெரிவித்த பிரதமர் இது குறித்து பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## இந்தியா - சீனா நிறுவனங்கள்

# எரிபொருள் விற்பனை நிலையங்களை கொள்வனவு செய்வதற்குப் போட்டி!

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்கப்படவுள்ள, 100 எரிபொருள் விற்பனை நிலையங்களைக் கொள்வனவு செய்வதற்கு முற்படும் இரண்டு இந்திய நிறுவனங்களுடன், சீன நாட்டு நிறுவனமொன்றும் போட்டியில் குதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

தனியார் மயமாக்கல் திட்டத்தின் அடிப்படையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 100 எரிபொருள் விற்பனை நிலையங்களை விற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நிலையங்களைக் கொள்வனவு செய்ய விரும்பும் நிறுவனங்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரபபட்டிருந்தன. இதன்படி இரண்டு இந்திய நிறுவனங்களுடனும் ஒரு சீன நிறுவனம் உள்ளிட்ட நான்கு நிறுவனங்கள் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ளன.

இந்தியாவின் பாரத் பெற்றோலிய நிறுவனம் மற்றும் ஹிந்துஸ்தான் பெற்றோலிய நிறுவனம் ஆகியனவும் சீனாவில் சிநோபெக் நிறுவனமும், உள்நாட்டு நிறுவனமான கிழக்கு மேற்கு பெற்றோலிய உற்பத்தி நிறுவனமும் இந்த எரிபொருள் நிலையங்களைக் கொள்வனவு செய்வதற்கு போட்டியில் குதித்துள்ளன.

இந்த நான்கு நிறுவனங்களில் எந்த நிறுவனத்துக்கு எரிபொருள் நிலையங்களை விற்பது என்று அடுத்த இரண்டு வாரங்களுக்குள் முடிவு செய்யப்படும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த எரிபொருள் நிலையங்களை விற்பதற்கான கேள்வித் தொகை நாற்பது மில்லியன் டொலரிலிருந்து எண்பது மில்லியன் டொலராக அதிகரிக்குமென்று அரசாங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரியவருகிறது.

இந்த எரிபொருள் நிலையங்களைக் கொள்வனவு செய்வதற்கான போட்டியிலிருந்த இந்தியாவின் ரிலையன்ஸ் இன்டஸ்ரிஸ் மற்றும் மலேசியாவின் தேசிய எண்ணெய் நிறுவனமான பெற்றோறாஸ் என்பன போட்டியிலிருந்து விலகிக்கொண்டன. கடந்த ஆகஸ்ட் மாதம் பத்துக்கு மேற்பட்ட நிறுவனங்கள் இந்த நிலையங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டியிருந்தன.

கடந்த ஆண்டில் 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இந்திய ஒயில் நிறுவனம் 75 மில்லியன் டொலருக்கு கொள்வனவு செய்திருந்தது.

நாட்டில் சுமார் 1000 எரிபொருள் விற்பனை நிலையங்கள் இயங்கிவருகின்றன. இவற்றில் 362 நிலையங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிர்வகித்து வந்தது. இவற்றில் 100 ஏற்கனவே விற்கப்பட்டுவிட்ட நிலையில் எஞ்சிய 100 நிலையங்களை கொள்வனவு செய்யவே இந்திய சீன நிறுவனங்கள் போட்டியில் குதித்துள்ளன.

எஞ்சிய பெரும்பாலான நிலையங்களை சிறிய முதலீட்டாளர்களே நிர்வகித்து வருகின்றனர். இந்தப் புதிய விற்பனை முயற்சி இந்த வருடத்தில் மிகப்பெரிய சொத்து விற்பனையாக இருக்குமென்று அதிகாரிகள் தெரிவித்தார்.



ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவும், பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவும், ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கிடையே நடந்த சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படம்

## அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியம் அமைப்பு!

அயர்லாந்தின் தலைநகர் டப்ளினில் நடைபெற்று வரும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உள்துறை அமைச்சர்களது மாநாடொன்றில் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கான நிதியம் அமைக்கும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த நிதியத்தில் முதற் கட்டமாக 30 மில்லியன் யூரோக்கள் சேகரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக்க் கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி ஒருவர், ஐரோப்பிய நாடுகளில் சட்டவிரோதமாகக் குடியேறுவோர் பொருளாதார நலன் கருதியே குடியேறுவதாகவும், அனேகமானோர் மூன்றாம் மண்டல நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியே இந்தச் சட்டவிரோதக் குடியேற்ற நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இங்கு குடியேறியுள்ள பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கையின் சட்டவிரோத குடியேற்றக்காரரால் அந்நாட்டு மொத்தத் தேசிய உற்பத்தியில் 17 சதவீதம் அல்லது 3லட்சத்து 70 ஆயிரம் மில்லியன் டொலர்கள் இவர்களைச் சென்றடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இதையொத்த நிலையே ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பார்வையிட ஐ.நா. சபையின் ஆணையாளர் யாழ்.வரவுள்ளார்

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடநாட்டிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பார்வையிடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இம்மாத நடுப்பகுதிக்குள் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ்பாணத்தில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 400 இற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது பற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் விசாரணைகளை நடத்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததுடன் இது தொடர்பாக நேரில் சன்று நிலைமைகளை ஆராயுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணை யாளருக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த அழைப்பை ஏற்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இம்மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவருடைய இந்த விஜயத்தின்போது, அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நேரில் சென்று பார்வையிடவுள்ளதுடன் பாதிக்கப்பட்ட பொதுமக்களையும் சந்தித்து பேசுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு கொழும்பில் 10 இடங்களில் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சுதந்திர சதுக்கத்தில் நடைபெற உள்ள பிரதான நிகழ்வுகளில் பிரதமரும், ஜனாதிபதியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்காக கடந்த முதலாம் திகதியில் இருந்து சில பிரதான வீதிகள் மூடப்பட்டுள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், வன்னி போன்ற இடங்களில் இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதால், கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# இந்தியா 4 விக்கெட்டுக்களால் சிம்பாப்வேயை தோற்கடித்தது

வி.பி. கிண்ணத்தொடருக்காக அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரின் நேற்று பேர்த்தில் நடைபெற்ற கடைசி லீக் ஆடடமான இந்திய - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இந்தியா 4 விக் கெட்டுக்களால் சிம்பாப்வேயை தோற்கடித்தது.நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணித்தலை வர் முதலில் தனது அணி துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே முதலாவது ஓவரிலேயே தனது ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் அவர்கள் ஓட்டமெதுவும் பெறாமலேயே இழந்தது. அதன் பின்னர் வந்த சிம்பாப்வே வீரர்கள் இந்திய பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சிற்கு முகம்கொடுக்க முடியாமல், ஓட்டங்களை எடுப்பதில் திணறினர்.

இறுதியில், சிம்பாப்வே 34.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களை எடுத்தது. இதில் உதிரிகளாக இந்திய பந்துவீச்சாளர்கள் கொடுத்தது 24. சிம்பாப்வே சார்பில் மற்ஸ் கென்யெறி 36, காலைஷ் 28, எர்வின் 23 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர், சிம்பாப்வே துடுப்பாட்ட வீரர்களில் மூவர் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் இர்பான் பதான் 4 விக்கெட்டுக்களையும் அமீத்பண்டாரி 3 விக்கெட்டுக்களையும், பாலாஜி, அஸிஸ் நெஹ்ரா இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. சிம்பாப்வே அணி பந்துவீச்சாளர்களின் பந்துகளுக்கு இந்திய துடுப்பாட்ட வீரர்களும் ஓட்டங்களை எடுப்பதற்கு மிகவும் சிரமப்பட்டனர். அதிகூடிய ஓட்டங்களாக பதானி 34, லக்ஸ்மன் 32, ஷேவாக் 23, ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் டெண்டுல்கர் 3, ர்ாவிட் 10, யுவராஜ் சிங் 4 ஓட்டங்களைப் பெற்றனர். சிம்பாப்வே உதிரிகளாக 23 ஓட்டங்களைக் கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது. பந்துவீச்சில் பிளிங் நொட், எர்வின் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், ஸ்ரிக் ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.



நேற்றைய போட்டியில் கங்கூலி, அகர்கர், முரளி கார்த்திக் மூவரும் விளையாடவில்லை. இதற்குப் பதிலாக ராகுல் ராவிட் அணித்தலைவராகச் செயற்பட்டதுடன், அமீத் பண்டாரி, அஸிஸ் நெஹ்ரா, ஹேமாங் பதானி மூவரும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

நாளை மறுதினம் தொடங்கும் அவுஸ்ரேலிய - இந்திய அணிகளுக்கிடையிலான இறுதி மூன்று போட்டிகள் கொண்ட தொடரில், முதல் இரண்டு போட்டிகளில் ஒரு அணி வென்றால் மூன்றாவது போட்டி கைவிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மத்திய கல்லூரியுடனான ஆட்டம்; மானிப்பாய் இந்து சமன் செய்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகள் இடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டித் தொடரில் கடந்தவாரம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற - மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு எதிராக யாழ்.மத்தியகல்லூரி பங்கு கொண்ட போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 90 ஓட்டங்களை மட்டும் பெற்றது. மத்தியகல்லூரி வீரர்கள் ரஜீவ்குமார், மதூசன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்கீளை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி 5 விக்கெட் இழப்பிற்கு 267 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் மத்திய கல்லூரி வீரர் ரஜீவ்குமார் ஆட்டம் இழக்காமல் 102 ஓட்டங்களையும் றோகான் 40 ஓட்டங்களையும், கபில்தேவ் 42 ஓட்டங்களையும், யசிகரன் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

தொடர்ந்து, இரண்டாவது இனிங்சை ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 6 விக்கெட் இழப்பிற்கு 168 ஓட்டங்களை பெற்றிருந்தவேளை, குறிப்பிட்ட நேரம் முடிவடைந்தமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. (58)

# கோப்பாய் கோட்ட மென்பந்து போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

யாழ். வலய - கோப்பாய் கோட்ட பாடசாலைகளிடையே கோப்பாய் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில், இடைக்காடு மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும், உரும்பிராய் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், அச்சுவேலி மத்திய கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (58)

# விளையாட்டு

## யூனியன் கல்லூரி, ஸ்கந்தா அணிகளை சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீழ்த்தியது

யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டித் தொடரில் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி கடந்த வாரங்களில் நடைபெற்ற போட்டிகளில் அமோக வெற்றி பெற்றது. சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இரு வெவ்வேறு போட்டிகளில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியையும், சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அணியையும் சென். பற்றிக்ஸ் அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டிகளின் ஸ்கோர் விபரம் வருமாறு:-

முதலாவது போட்டியில் முதலில் துடுப்பாட்டதாடிய யூனியன் கல்லூரி 40 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 300 ஓட்டங்களை பெற்றது. இரண்டாவது இனிங்சில் 168 ஓட்டங்கள் பெற்று யூனியன் கல்லூரியின் சகல வீரர்களும் ஆட்டமிழந்ததால் சென்.பற்றிக்ஸ்கல்லூரி இனிங்சாலும், 92 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி 52 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 9விக்கெட் இழப்பிற்கு 166 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது இனிங்சை ஆடிய ஸ்கந்தா அணி 137 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால், 24 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய சென்பற்றிக்ஸ் கல்லூரி விக்கெட் இழப்பின்றி குறிப்பிட்டட ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. (58)

# தென்னாபிரிக்க அணியில் மீண்டும் நிக்கி போஜி

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்த மாதம் நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து, 3 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. ஒருநாள் தொடர் எதிர்வரும் 13 ஆம் திகதி ஒக்லாந்தில் தொடங்குகிறது.

இந்த சுற்றுப்பயணத்திற்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சுழற்பந்து வீச்சாளர் நிக்கி போஜி மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக கடந்த ஜூலை மாதத்தில் இருந்து அவர் விளையாடவில்லை. நியூசிலாந்து தொடருக்கான தென்னாபிரிக்க ஒரு நாள் போட்டி அணி வருமாறு:- ஸ்மித் (கப்டன்) மார்க் பவுச்சர், கிப்ஸ், கலிஸ், டிப்பன்னர், குளூஸ்னர், மொர்கல், மபெனஹா, போஜி, அல்பி மொர்கல், சுன்ரூ நெல், என்ரினி, பீட்டர்சன், பொலக், பிரின்ஸ், றுடோல்ப் டெஸ்ட் போட்டியில் டிப்பன்னர், குளூஸ்னர், பீட்டர்சன், பிரின்ஸ் ஆகியோருக்கு பதிலாக கிர்ஸ்டன், மெக்கன்சி, மார்ட்டின்வான், போல் அடம்ஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.



# உத்தரபிரதேச இடைத் தேர்தல் முலாயம் சிங் புதிய சாதனை!

சட்டசபை இடைத் தேர்தலில் உத்தர பிரதேச முதலமைச்சர் முலாயம் சிங் யாதவ் ஒரு லட்சத்து 83 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றார்.

இது அந்த மாநில தேர்தல் வரலாற்றில் புதிய சாதனையாகும்.

உத்தரப்பிரதேசத்தில் மாயாவதி ஆட்சி கவிழ்ந்ததை தொடர்ந்து சமாஜ்வாதிக்கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் முதலமைச்சர் ஆனார். முலாயம்சிங் சட்டமன்ற உறுப்பினராக இருக்கவில்லை. இதனால், அவர் குன்னார் சட்டசபை தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து அரிப் அலி (பகுஜன்சமாஜ்), குல்பம் சிங் யாதவ் (பா.ஜனதா) ஆகியோர் போட்டியிட்டனர்.

இந்தத் தொகுதியில் கடந்த மாதம் 24 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் தில்லுமுல்லு நடைபெற்றதாகக் கூறி, 107 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு நடந்தது. இதனை பகுஜன் சமாஜ் கட்சி, பா.ஜ.க. போன்றவை புறக்கணித்தன. ஆனாலும் நேற்று முன்தினம் மறுவாக்குப்பதிவை தேர்தல் திணைககளம் நடத்தி முடித்தது. அதன் பின்னர் நேற்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

இதில் முலாயம் சிங்யாதவ் 1,83,899 வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றார். ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற வாக்குகள் விபரம் வருமாறு -

(முலாயம் சிங் யாதவ் - சமாஜ்வாதிக்கட்சி 1,95,213, அரிப் அலி - 11,314, (பகுஜன் சமாஜ்கட்சி), குல்பம்சிங் யாதவ் - 6991, புதிய சாதனை சட்டசபை தேர்தலில் 1,83,899 வாக்குகள் வித்தியாசத்தில் முலாயம்சிங் யாதவ் வெற்றிபெற்றிருப்பது உத்தர பிரதேச தேர்தல் வரலாற்றில புதிய சாதனையாகும். இதற்கு முன்பு 1996 ஆம் ஆண்டு தேர்தலில் ராம்பூர்த் தொகுதியில் பிரமோத் திவாரி (காங்கிரஸ்) 1 இலட்சத்து 26 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார். இதை தற்போது முலாயம்சிங் யாதவ் முறியடித்துவிட்டார்.

# திருமாவளவன் - கிருஷ்ணசாமி கூட்டு தி.மு.க.வின் வாக்குப் பலத்தினை பாதிக்கும்

தலித் கட்சிகளான விடுதலைச் சிறுத்தைகளும், புதிய தமிழகமும் கைகோர்த்திருப்பது தமிழக தேர்தல் களத்தில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

மூன்றாவது அணி என்று பேசிக்கொண்டிருந்தவர்கள் இப்போது தி.மு.க அணியில் திரண்டிருக்க, தலித் கட்சிகள் இணைந்து மூன்றாவது அணியை உருவாக்கிவிட்டன.

கருணாநிதியின் பிடிவாதப் போக்கினால், வெகுண்டெழுந்த விடுதலைச் சிறுத்தைகளும், புதிய தமிழகமும் இணைந்து கூட்டணி அமைத்து நாடாளுமன்றத் தேர்தலைச்சந்திக்க உள்ளன.

இந்தக் கூட்டணியில் வேறு சில கட்சிகளும் இணையலாம் என்று கூறப்படுகிறது. குறிப்பாக கண்ணப்பனின் மக்கள் தமிழ் தேசம் போன்ற தலித்துகளுடன் மோதல் போக்கை கடைபிடிக்காத பிற ஜாதிக்கட்சிகளும் இதில் இணைய வாய்ப்புள்ளது.

கடந்த 1999 ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலின் போது, த.ம.க. தலைமையிலான கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகளும், புதிய தமிழகமும் இடம்பெற்றிருந்தன. இருப்பினும் திருமாளவனும் டொக்டர் கிருஷ்ணசாமியும் நேருக்குநேர் பார்த்துக்கொள்வதையோ, பேசிக்கொள்வதையோ கூட தவிர்த்து வந்தனர்.

அந்த அளவுக்கு இருவரும் இரு துருவங்களாகவே இயங்க| வந்தனர்.

2001ஆம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலின் போது, தி.மு.க தலைமையிலான கூட்டணியில் இரு கட்சிகளும் இடம்பெற்றன. அப்போதும் இருவரும் பேசிக்கொண்டது .கிடையாது. இரு கட்சிகளும் தேர்தலில் படுதோல்வியை சந்தித்தன. திருமாவளவன் மட்டுமே கடலூர் மாவட்டம் மங்களூர் தொகுதியில் வெற்றி பெற்றார்.

இரு தலைவர்களுக்குமே தலித் மக்கள் மத்தியில் மிகப் பெரும் செல்வாக்கு இருந்தும், இருவரும் ஒற்றுமையுடன் செயல்படாத காரணத்தால் இரு பிரிவு தலித் வாக்குகளும் இதுவரை பிரிந்தே கிடந்தன. இருவரும் சேர்ந்து செயல்பட்டால், தலித் வாக்குவங்கி மிகப்பெரிய சக்தியாக மாறும் என்று, தமிழக அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வந்தது. இருவரையும் சேர்த்து வைக்கக் கூட சில தலைவர்கள் முயன்றனர். இருப்பினும் இந்த இருவருமே இணைந்து செயல்படும் எண்ணமே இல்லாமல் இருந்து வந்தனர்.

தற்போது தங்களை ஏமாற்றிவிட்டதாக தி.மு.க.வைக் குற்றம் சாட்டிவிட்டு இரு கட்சிகளும் கூட்டணி அமைத்துள்ளன. பிரசாரத்தின்போதும், அ.தி.மு.க.வை விட்டுவிட்டு தி.மு.க.வுக்கு எதிராகவே இவர்கள் காய் நகர்த்துவார்கள் என்று கூறப்படுகின்றது.

இருவரும் திட்டமிட்டு செயல்பட்டால் தி.மு.க தலைமையிலான ஜனநாயக.முற்போக்குக் கூட்டணியின் வாக்கு வங்கிக்கு பெரும் அடி கிடைக்கும் என்கின்றனர், தமிழக அரசியல் பார்வையாளர்கள். அத்தோடு, அ.தி.மு.க தரப்பில் இருந்தும் இந்தத் தலைவர்களுக்கு மறைமுக ஆதரவு கிடைக்கவும் வாய்ப்புள்ளதாக பேச்சு அடிபடுகிறது.

# சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து திருமாவளவன் நேற்று விலகினார்!

தி.மு.க கூட்டணியில் இருந்து விலகிய விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச்செயாலாளரான திருமாவளவன், தி.மு.க சின்னத்தில் போட்டியிட்டு வென்ற தனது சட்டசபை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். 2001 ஆம் ஆண்டு நடந்த, கடந்த சட்டமன்றத் தேர்தலில், கடலூர் மாவட்டம் மங்களூர் தனித் தொகுதியில் தி.மு.க கூட்டணி சார்பில் போட்டியிட்டார். திருமாவளவன். தி.மு.க சின்னத்திலேயே நின்று அவர் வெற்றியும் பெற்றார்.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனக்கு கடலூர் தொகுதியைத் தரவேண்டும் என தி.மு.க.விடம் கேட்டார். ஆனால், அவருக்கு இடம் தரப்படாததால் நேற்று முன்தினம் தி.மு.க கூட்டணியைவிட்டு விலகினார். அவருடன். புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டொக்டர் கிருஷ்ணசாமியும் விலகி, இருவரும் மூன்றாவது அணி அமைத்துள்ளனர்.

இதையடுத்து, தி.மு.க சார்பில் தனக்குக் கிடைத்த சட்டமன்ற உறுப்பினர் பதவியை நேற்று திருமாவளவன் ராஜினமா செய்தார். தனது ராஜினாமாக் கடித்தை முதல்வர் ஜெயலலிதாவுக்கும், சபாநாயகர் காளிமுத்துவுக்கும் அனுப்பியுள்ளதாக செய்தியாளர்களிடம் திருமாவளவன் தெரிவித்தார்.இன்று சட்டமன்றம் கூடவுள்ள நிலையில் திருமாவளவன் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

சபாநாயகருடன் சேர்த்து முதல்வர் ஜெயலலிதாவுக்கும் தனது கடிதத்தை அனுப்புவதன் மூலம் அ.தி.மு.க.வு.டனான உறவுக்கு திருமாவளவன் அடிபோடுவதாகக் கருதப்படுகிறது.

d) 1 வளிமண்டல அமுக்கத்தில் நீரின் ஆவியாதலின் தன்மறை வெப்பம் $2.26x10^6 jkg^{-1}$ ஆகும். 1 வளிமண்டல அமுக்கத்தில் 1kg நீர் முற்றாக ஆவியாக்கப்படுகின்றது.

1. நீரின் கனவளவு யாது?
11. நீராவியின் கனவளவு யாது?
111. இச்செயன்முறையின்போது வெளியமுக்கத்திற்கு எதிராகச் செய்யப்படும் வேலை யாது?
1V. ஆவியாதலின்போது உட்சக்தி அதிகரிப்பு யாது?

நீரின் அடர்த்தி 1000 $kgm^{-3}$
1 வளிமண்டல அமுக்கம் $= 1x10^5$ pa
நீரின் சார்மூலக்கூற்றுத்திணிவு = 18
அகிலவாயு மாறிலி 8.3 $jmol^{-1}k^{-1}$

3. ஹோலின் விளைவு என்பதனை விளங்குக?




படத்தில் காட்டப்பட்டுள்ளதுபோல் I அம்பியர் மின்னோட்டம் காவும் செவ்வகக்கடத்தி ஒன்று சீரான காந்தப்பாய அடர்த்தி B இற்கு செங்குத்தாக வைக்கப்பட்டுள்ளது.

1. படத்தை உமது விடைத்தாளில் பிரதி செய்து, ஏற்கக் காவியில் தொழிற்படும் விசைகளைக் குறிக்க?
11. ஹோலின் அழுத்த வேறுபாடு (Vh) இற்கான கோவையை பெறுக? (பயன்படுத்தப்படும் குறிகளை அடையாளப்படுத்துக)
111. இக்கடத்தினூடான மின்னோட்டம் I இற்கான கோவையை எழுதுக?

IV. 4mm தடிப்புடைய ஒரு செவ்வகக் கடத்தினூடு 0.5A மின்னோட்டம் பாய்கின்றது. இப்பகுதிக்குச் செங்குத்தாக 0.2T காந்தப்புலம் பிரயோகிக்கப்படுகின்றது. எதிர் ஓரங்களுக்கு இடையில் 6mV ஹோல் அழுத்த வேறுபாடு உருவாக்கப்பட்டது. அலகுக் கனவளவிலுள்ள ஏற்றக்காவியின் எண்ணிக்கையைக் காண்க?
(இலத்திரனின் ஏற்றம் 16x10-19C)

V. ஹோலின் விளைவின் பிரயோகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

4. (A) மின்முதல் ஒன்றின் மின் இயக்க விசை, அகத்தடை என்பவற்றை துணிவதற்காக சுற்று ஒன்றைப்படம் காட்டுகின்றது.




(a) முதலின் மின் இயக்கவிசை E, அதன் அகத்தடை r, அம்பியர் மானி வாசிப்பு I, தடைப்பெட்டியின் வாசிப்பு R என்பவற்றைத் தொடர்பு படுத்தும் கோவையை எழுதுக. R எதிர் 1/1 வரைபைக் கூடியவகையில் இச்சமன்பாட்டை உருமாற்றுக.

(b) இம்மாணவியால் பெறப்பட்ட R எதிர் 1/1 வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




வரைபைப் பயன்படுத்தி
1. முதலின் மின் இயக்க விசை E ஐக் காண்க.
11. முதலின் அகத்தடை r ஐக் காண்க.
111. முதலின் குறும் சுற்றாதலின்போதான உயர் மின்னோட்டம் யாது?

**M.கருணாநிதி B Sc (Spl) Dip-in Ed**

# தமிழ் 11

01. கீழ் வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பை தெரிவு செய்து 350-400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
1. பேராசிரியர் க.கைலாசபதியின் தமிழ்ப்பணிகள்.
2. நாட்டார் இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்.
3. குறுந்தை இலக்கியம்.
4. பொதுஜன தொடர்புசாதனங்கள் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள்.
5. சமயமும் வாழ்வும்.
6. செய்யும் தொழிலே தெய்வம்.

02. பின்வரும் (அ) உரைப்பகுதியையும் (ஆ) செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அ) ஆயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டு பழங்குடி மக்களாகப் பாது காப்புப்பட்டாளமாக இருந்துவரும் தமிழ்நாட்டு வறிய ஜனங்களை ஒதுக்கி மிதித்து, மாக்களிலும் கேடாக ஊறக்குப் பும்பாக, நாகரீகத்துக்கு வெளியே சீவிக்கச்செய்தும் அவர்களுக்கு இழிபட்டமளித்தும், பார்த்தால் பாவம், தொட்டால் தீட்டு, நடந்தால் குற்றம் என்று தர்மம் வகுத்தும் தெருவிலே நுழையவும் முடியாதபடி அவர்களை மருட்டியும் வைப்பதும் நீதியா, முறையா?

1. இந்தப் பகுதியில் ஆசிரியர் வெளியிடக் கருதியது எதனை?
2. அதனை எத்தகைய உணர்ச்சியோடு எவ்வாறு வலியுறுத்துகிறார்?
3. இந்தப் பகுதியில் ஆசிரியர் கூறியவற்றை பதினைந்து சொற்களுக்கு மேற்படாமல் சுருக்கி எழுதுக?

ஆ) இட்டோர் தாமரைப்பூ, இதழ் விரித்தல் போலே
வட்டமாய் புறாக்கள் கூடி இரையுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டிவலை குத்துமில்லை வேறு வேறிருந்தருந்தும்
கட்டிலலைக் கீழ் மேலெனும் கண்மூடி வழக்கமில்லை.

1) இந்தச் செய்யுள் வாயிலாக ஆசிரியர் வெளியிடும் இலட்சியம் யாது?
2) இந்தச் செய்யுளில் இடம்பெறும் அணியினை விளக்குக?
3) இந்தச் செய்யுளில் ஆசிரியர் பொதித்து வைத்துள்ள கருத்தை ஏறத்தாழ முப்பத்தைந்து சொற்களில் ஓர் பந்தியாக எழுதுக?

03. (அ), (ஆ), (இ), (ஈ) பகுதிகளிலுள்ள வினாக்களில் எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

சந்தி பிரித்தெழுக.
(அ) 1. நமக்கென்னென்றிட்டுண்டிரும்
2. அகத்தானொன்றை யுன்னி மலைக்கட்டங்குவர்

ஆ) பின்வரும் வாக்கியங்களிலுள்ள பொருள் மயக்கத்தைச் சுட்டிக் காட்டி அவற்றைப்பொருள் மயக்கமற்ற முறையில் திருத்தி எழுதுக.
3. பொல்லாத விலங்குகளையும் வழிப்போக்கர்களையும் கண்டனர்.
4. கூட்டத்திற்கு பதில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமை தாங்கினார்.

இ) பின்வரும் வாக்கியங்களிலுள்ள இலக்கண வழுக்களை எடுத்துக் காட்டி அவற்றைத் திருத்துக.
5. பின்வந்த செய்யுட்களுள் ஏதேனும் மூன்றினுக்கு உரை எழுதுக.
6. பாரதியார் கவிதைகளை இயற்றியதுடனமையாது கதைகளை எழுதியுள்ளார்.

ஈ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?
7. பலாசு, உண்மை என்பதில் உகரத்தின் மாத்திரை யாது?
8. கண்ணவா, கண்ணன் வருக இந்த வாக்கியத்தில் இடம்பெறும் வினைகள் எவ்வெவ் வகையைச் சார்ந்தன.
9. அவர் வந்தார், அவர்கள் வந்தார்கள் இந்தவிரு வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள படர்க்கைப் பெயர்களுக்கடையிலான வேறுபாடு யாது?
10. நான் தேநீர் குடித்தேன்
அவன் மரங்களைத் தறித்தான் - இவ்விரு வாக்கியங்களையும் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றுக.
11. மாட்டின் குஞ்சத்தை அவிழ்த்தான். இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகள் யாவை? அவை என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது?
12. கமலா ஊடல் கொண்டாள் என்பதில் வந்துள்ள தொழிற்பெயர் யாது?
13. அறிவும் ஆற்றலும் நிறைந்த புலவர் ஒருவர் இருந்தார். இதில் உம் இடைச்சொல் என்ன பொருளில் வந்துள்ளது.
14. தங்கக்காப்பு, வெண்மணல், பாய்மா, பாரிகாரி, இவை எவ்வெவ் தொகைகளாகும்.

(தொடரும்...)

ஆசிரியர் என்.பாலா -
மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

இங்கே மடிக்கவும்





மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

▼ இல. 1 முதல் 5 வரை வினாக்களுக்கு படத்தைப் பார்த்து விடை தருக.



1. இப்படத்தில் உள்ளவரை எவ்வாறு அழைப்பர்?
..............................
இவர் என்ன தொழில் செய்கின்றார்?
..............................
3. இவர் செய்யும் தொழிலுக்கு என்ன பொருட்கள் தேவை?
..............................
4. இப்பாத்திரங்களை எதற்கு உபயோகிக்கின்றனர்?
..............................

5. பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.
மக்கள் .............. தொழில் ..................

▼ இல. 06 முதல் 10 வரை வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள உருவங்களுடன் மிக நெருங்கிய தொடர்பினை உடைய சொற்கள் அடங்கிய விடையின் கீழே கோடிடுக.

6)



1. பறவைகள், வியாபாரிகள், மருந்து
2. மரப்பலகை, மருந்து, உணவு
3. விலங்கு, நிழல், மரப்பலகை

7)




1. வியாபாரி, அதிபர், பெற்றோர்
2. கடதாசி, தொழிற்சாலைகள், விளையாட்டு
3. கற்றல், மாணவர், ஆசிரியர்

8)



1. காடு, சோறு, திரியும்
2. பழம், பறவை, கூடு
3. கத்தும், இறைச்சி, புற்று

9)



1. வீடு, மாமிச உண்ணி, பேசும்
2. கொம்பு, தாவர உண்ணி, கறுப்பு
3. கிளையுள்ள கொம்பு, ஆட்டினம், தாவர உண்ணி

10



1. பாடசாலை, அதிபர், ஆசிரியர்
2. விளையாட்டு, உடல்வலு, மாணவர்
3. படிப்பு, பாடம், விளையாட்டு

▼ இல. 11 முதல் 20 வரை எழுத்துக்களின் தொடர்புகளையும், எண்களின் தொடரையும் அவதானித்து கீழே தரப்பட்ட அறிவுறுத்தல்களை வாசித்து அதன்படி செய்க.

| |
|---|
| 3, 8, 4, 9, 3, 4, 5, 8, 5, 4, 7, 6, 2 |
| A, N, E, G, F, E, H, C, K, Q, R, I, K |
| ம க ல சி ப க ங் ப ய |

11. தமிழ் எழுத்தில் இருந்து ஒரு மிருகத்தின் பெயர் எழுதுக.
..............................
12. தமிழ் எழுத்தில் இருந்து ஒரு பெண்ணின் பெயர் எழுதுக.
..............................
13. காற்றாடி ஒன்றின் ஆங்கிலச் சொல்லுக்குரிய மூன்று எழுத்துக்களைக் கொண்ட ஆங்கில எழுத்துக்களைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
..............................
14. அடுத்து வரும் மூன்று எண்களின் கூட்டுத்தொகை 16 வரும்படி அந்த மூன்று எண்களையும் வட்டமிடுக.
..............................
15. G என்ற எழுத்தையும் மூன்றாவதாக வரும் 4 எண்ணையும் எழுதுக.
..............................
16. இதில் வரும் முக்கோண எண்களை எழுதுக.
..............................
17. முதல் நான்கு எண்களையும் பெறுமானம் கூடியமுறையில் எழுதுக.
..............................
18. ஒரு வாகனத்தின் பெயர் வரக்கூடிய ஆங்கில எழுத்தின் கீழ்க் கோடிடுக.
..............................
19. இடமிருந்து ஐந்தாவதாக உள்ள இலக்கத்தையும், வலமிருந்து நான்காவதாக உள்ள இலக்கத்தையும் கூட்டவரும் எண்ணுக்குச் சமமாக உள்ள இலக்கத்தைச் சுற்றி சதுரமிடுக.
20. இதில் உள்ள ஆங்கில எழுத்துக்களை அகரவரிசைப்படி எழுதுக.
..............................

▼ இல. 21 முதல் 25 வரை சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
21. வேறுபட்ட ஒரு பொருள் எது?
1. புத்தகம் 2. சஞ்சிகை 3. நூலகம் 4. கையேடு
22. மக்கா எவ்வின மக்களின் புனிதத்தலம்?
1. மலாயர்கள் 2. பௌத்தர்கள்
3. முஸ்லிம்கள் 4. கிறிஸ்தவர்கள்
23. இயற்கை அழகு மிக்க கடற்கரைகள் எமது நாட்டுக்கு பாரிய அளவில் தரும் அந்நிய வருமானம் யாது?
1. மீன்பிடி 2. சுற்றுலா
3. ஹோட்டல்கள் 4. உப்பு
24. நிறக்கடதாசிகள் பலவற்றை கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்யும் ஆக்கம் பின்வருவனவற்றுள் எது?
1. கைவேலைச் சித்திரம் 2. பல்கலை
3. ஒட்டுச்சித்திரம் 4. கொலாஜ்
25. மாற்றான உறவு அழிவைத் தரும்
1. பகைவன் 2. நண்பன்
3. நல்லவன் 4. அயலவன்

▼ இல. 26 முதல் 29 வரை வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
26. பாடம் படிக்கிறேன் என்பதன் எழுவாய், பயனிலையை எழுதுக.
..............................
27. எறிந்தாய் என்பதன் எதிர்காலம் யாது?
..............................
28. தூக்கம் வந்தால் தானாகவே மூடும் கதவுகள் எவை?
..............................
29. நஞ்சு என்பதன் ஒத்தசொல் தருக.
..............................

▼ இல. 30 முதல் 34 வரை ஒவ்வொரு சொல்லுக்குமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எழுத்தை இடைவெளியில் எழுதுக.
30. SP......N 31. BICY.....LE 32. FAR....ER
33. ප ....... ව 34. දෙ........ සි

▼ இல. 35 முதல் 39 வரை சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும்எழுதுக.
35. அஞ்சல் அலுவலகங்களில் நோயாளிக்குச் சிகிச்சை கொடுக்கப்படும். ( )
36. பாரமான கல்லைத் தள்ளி வைக்க கப்பி பயன்படுத்தப்படுகிறது. ( )
37. பொலித்தீனை மண்ணுடன் கலப்பதால் எவ்வித தீமையும் உண்டாகாது. ( )
38. சுண்ணாம்பு கலந்த நீரை பஞ்சினால் வடிக்கும்போது தூய்மையான நீரைப் பெறலாம். ( )

39. பலாமரத்தைத் தறிப்பதற்கு அனுமதிப்பத்திரம் எடுக்கவேண்டும். ( )

▼ இல. 40 முதல் 43 வரையுள்ள வினாக்களில் பின்வரும் நான்கு உருக்களில் மூன்று உருக்கள் ஏதோ ஒரு வகையில் ஒரே மாதிரியானவை. ஒன்று மட்டும் வித்தியாசமானது. வித்தியாசமான உருவைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

40. 
1 2 3 4

41. 
1 2 3 4

42. 
1 2 3 4

43. 
1 2 3 4

44. 
1 2 3 4

▼ இல. 45 முதல் 47 வினாக்களின் படங்களின் பிழையான படத்தை தெரிவுசெய்து அதன்கீழ் கீறிடுக.

45. 
1 2 3 4

46. 
1 2 3 4

47. 
1 2 3 4

▼ இல. 48 முதல் 49 வரை முதலாவதாகத் தரப்பட்டுள்ள படத்துடன் கருத்து நிறைந்த வகையில் தொடர்புகொண்டிருக்கும் படத்தை தரப்பட்டுள்ள நான்கு படங்களிலிருந்து தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

48. 
(1) (2) (3) (4)

49. 
1 2 3 4 (முற்றும்)

◇ 50 ஆம் 51 ஆம் வினாக்களில் தரப்பட்ட படங்களை முழுமையாக உள்ளடக்கும் கருத்துள்ள மிகச் சரியான விடையின்கீழ் கீறிடுக.

(50) 

1) பாரங்கூடிய பொருட்களைக் கொண்டுசெல்லலாம்.
2) வெளிநாடுகளுக்குச் செல்ல உதவும்
3) போக்குவரத்துச் சாதனங்கள்

(51) 

1) ஒலி சாதனம் 2) ஒளி சாதனம் 111) ஒலி, ஒளி சாதனம்

◇ கீழ்வரும் பாடலை வாசித்து 3 ஆம், 4 ஆம் வினாக்களின் சரியான விடையின்கீழ் கீறிடுக.

> உள்ளக்கமலம் தன்னில் எதையும்
> ஒழித்துவையா எழில் நிலா
> பிள்ளை மனது கொண்டு ஒளியைப்
> பெய்து எங்கும் செல்லுதே!

(52) "பிள்ளை மனது கொண்டு ஒளியை எங்கும் பெய்து செல்லுதே" என்பதன் கருத்து
1) விளையாடிக்கொண்டு செல்கிறது.
2) சூது, வாது கள்ளங்கபடமற்ற தூய்மையான சேவை செய்கிறது.
3) ஒன்றும் தெரியாமல் செல்கிறது.

(53) "எழில் நிலா " என்பதன் கருத்து
1) வட்டமான நிலா 2) அழகான நிலா 3) சிவப்பான நிலா

◇ இல. 54-58 வரையான வினாக்களில் தரப்படும் தகவல்கள் பிழையானவை. பிழையானதற்கான காரணம் எதுவெனத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை வெற்றுக்கூட்டினுள் எழுதுக.

(54) புலி வாழைப்பழத்தை தோலுடன் தின்றது
1) புலிக்கு கடுமையான பசி.
2) புலி வாழைப்பழம் தின்னாது.
3) புலி வாழைப்பழத் தோலை நீங்கியே தின்னும்.

(55) பகலில் நட்சத்திரங்கள் அழகாகப் பிரகாசித்தன.
1) நட்சத்திரங்கள் பிரகாசிப்பதில்லை.
2) நட்சத்திரங்கள் பகலில் பிரகாசிப்பதில்லை.
3) நட்சத்திரங்கள் பகலில் பிரகாசிப்பதைக் கண்ணால் காணமுடியாது.

(56) பெப்ரவரி 30 திகதி சுரேஸ் பிறந்தான்.
1) அப்படி ஒரு தேதி இல்லை.
2) சுரேஸ் ஒரு மனிதனல்ல.
3) சுரேஸ் ஒரு ஆண் ஆகும்.

(57) கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற குமாருக்கு தொடர்ந்து மீன் கிடைத்தது. இதனால், ஓடம் நிரம்பி குமாரும் ஓடமும் நீரில் மூழ்கின. இதற்குப் பொருந்தாத பழமொழி
1) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
2) பேராசை பெரும் தரித்திரியம்.
3) போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.

(58) 'உச்சி குளிர்தல்' என்ற மரபுத்தொடரின் கருத்து
1) மிக்க மகிழ்ச்சி
2) பனியில் நிற்றல்
3) உதவி செய்தல்

(தொடரும்...)

இங்கே மடிக்கவும்



# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2004 - ஏப்ரல்

## 2004 உயிரியல் - பகுதி I

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

11. பின்வரும் அமினோ அமிலங்களில் அமிலத் தன்மையானது
1. அலனின் 2. பீனையில் அனலின்
3. இலைசீன் 4. லியூசீன் 5. யாவும்.

12. Go நிலையில் உள்ள பின்வரும் கலங்களில் எது தேவையேற்படின் இழையுருப்பிரிவடைகின்றது.
1. நரம்புக் கலம் 2. ஈரற்கலம் 3. தசைக்கலம்
4. செங்குழியம் 5. நடுநிலைநாடி

13. பின்வரும் பூச்சிக் கூட்டங்களில் எது வடிவொத்த இரண்டு சோடி சிறகுகளையுடைய உறுப்பினர்களை கொண்டுள்ளன.
1. Isoptera, lepi doptera 2. Hymenoptera, lepidoptera
3. Coleoptera, Orthoptera 4. Hemiptera, Diptera

14. பல்சக்கரைட்டுப் பற்றிய கூற்றுக்களில் சரியானது
1. தனியான குளுக்கோசைக் கொண்டது.
2. இயற்கை மென்சவ்வினூடாகக் கடத்தப்படமாட்டாது.
3. பெப்ரைட்டுப் பிணைப்பை கொண்டது.
4. இரு எசுந்தர் பிணைப்பைக் கொண்டது.
5. C,H,O,N கொண்டது.

15. குருதியில் காணப்படும் அதிகளவு புரதமாவது
1. அல்புமின் 2. குளோப்பியூலின் 3. பைபிரினோஜன்
4. புரோதுரம்பின் 5. கொலாஜின்

16. இலங்கையில் காணப்படும் பொதுவான குருதிக்கூட்டமாவது
1 A 2. AB 3. B 4. O 5. A,B

17. இலங்கையில் காடு அதிகமாக உள்ள இடமாவது
1. கொழும்பு 2. முல்லைத்தீவு 3. யாழ்ப்பாணம்
4. கம்பகா 5. இரத்திரபுரி

18. பின்வருவனவற்றில் இலங்கையில் ஆமைகள் முட்டையிடும் ஒரு இடமாவது
1. Kalametiya சரணாலயம் 2. Bandala சரணாலயம்
3. சிங்கராஜாவனம் 4. நீர்கொழும்பு கடல்நீரேரி
5. சவனாப்புல் நிலம்

19. உயிர்ச்சுவடு தோன்ற அதிக வாய்ப்புக் காணக்கூடிய சந்தர்ப்பம் எது?
1. அமிலத்தன்மையான ஏரி .
2. நடுநிலையான ஏரி .
3. அமிலத் தன்மையான தாவரப் பொருட்கள் நிறைந்த ஏரி .
4. உயர்வெப்பநிலை காணப்படும் சூழல் .
5. தாழ்வெப்பநிலை உள்ள சூழல்

20. பசையவுருமணிகளில் மணி உருக்கள், பஞ்சணை என்பன காணப்படுகின்றது. மணி உருக்கள் பற்றிய கூற்றுக்களில் சரியானது.
1. குளோரபில், புரதம், இலிப்பிட்டு மூலக்கூறுகள் காணப்படும்.
2. ஒளித்தொகுப்பின் இருள்நிலைத்தாக்கம் இதில் நிகழும்.
3. குளோரபில் மட்டும் கொண்டுள்ளது.
4. பற்றிரியாக்களிலும் காணப்படும்.
5. சில விலங்குக் கலங்களிலும் காணப்படும்.

11. ஊதா பற்றிரியா உணவு தயாரிப்பதற்கெனப் பயன்படுத்துவது
1. செந்நிற ஒளியை மாத்திரம்
2. ஊதா கடந்த ஒளியை மாத்திரம்.
3. நீல நிற ஒளியை மாத்திரம் .
4. செந்நிற, ஊதா கடந்த ஒளியை மாத்திரம்.
5. பச்சை நிற ஒளியை மாத்திரம்.

12. பின்வருவனவற்றில் எளிய நுனி வளராப் பூந்துணர் ஒன்றினை உருவாக்குவது.
1. வெங்காயம் 2. மல்லிகை 3. உருளைக்கிழங்கு
4. தென்னை 5. பப்பாசி

13. வளர்திருப்ப அசைவிற்கு உதாரணமாவது.
1. தண்டு ஒளியை நோக்கி வளைதல்.
2. மகரந்தக் குழாய் காட்டும் அசைவு.
3. கிரமிடோமோனசு ஒளியை விலக்கி அசைதல்.
4. தொட்டாற் சுருங்கி தாவர இலை சுருங்குதல்.
5. வேரின் வளர்ச்சி.

14. பின்வரும் மூலகங்களில் நைத்திரேற்றை அமோனியாவாக மாற்றும் நொதியச் செயற்பாட்டிற்கு அவசியமானது.
1. Fe 2. Cu 3. Mn 4. Zn 5. No

15. கீழ்க்காணும் இயல்புகளுள் சுவாசத்தொகுதிகள் யாவற்றிலும் காணப்படும் இயல்புகளாவன.
1. வாதனாளி 2. சிற்றறை 3. குருதிநிறப்பொருள்
4. எதிரோட்ட ஒழுங்குகள் 5. ஈரலிப்பான மேற்பரப்புகள்

16. கீழ்க்காணும் இயல்புகளில் எது பறவைகள் தற்போது வாழ்ந்து வரும் நுகருயிர் வகைகள் ஆகிய இரண்டிலும் காணப்படும்.
1. இறக்கை 2. அலகு 3. சிறகு
4. காய்ந்த தோல் 5. இருகால் வழக்கம்.

17. நெல்லில் ஏற்படுகின்ற பங்கசு நோயாவது.
1. மஞ்சட்குருள் 2. மடல் வெளிறல்
3. செம்மஞ்சள் இலை 4. இலைச்சுருளல் 5. யாவும்.

18. பெரும்பாலும் கடலிலும், சில இனங்கள் நன்னீரிலும் வாழும் இனங்களைக் கொண்ட கூட்டமாவது.
1. Polychaeta 2. Arachnida 3. Echinodermata
4. Chilopoda 5. Diplopoda

19. சிங்கராஜா வனத்தில் நிலவும் ஆண்டுக்குரிய சராசரி வெப்பநிலையானது.
1. 25°c 2. 30°c 3. 22°c 4. 23.6°c 5. 24.3°c

20. குல்விந்தக முலையூட்டிகளும், பறவைகளும் முன்னேற்றமடைந்த காலமாவது.
1. Mesozoic யுகம் 2. Paleozoic யுகம்
3. Cenozoic யுகம் 4. Cenozoic யுகம் 3 ஆம் காலம்
5. Mesozoic யுகம் Cretaceous காலம். (முற்றும்)

வே.அ.ஞானேந்திரன் BSC.Dip in .Ed

## பௌதீகவியல் 11
## Physics 11

1. a (1) உடலின் சடத்துவத் திருப்பம் என்பதனை வரையறுக்க?
(11) தரப்பட்ட உடல் ஒன்றின் சடத்துவத்திருப்பம் ஆனது ஏன் குறித்த பெறுமானமாக இருப்பதில்லை.
(111) விறைத்த உடல் ஒன்று கோணவேகம் W உடன் ஓர் அச்சுப்பற்றி சுழல்கின்றது. அதன் சுழற்சி இயக்கசக்தி 1/2 $Iw^2$ என நிறுவுக. இங்கு I- உடலின் அச்சுப் பற்றி சடத்துவத் திருப்பம் ஆகும். {உதவி: உடல் ஒன்று சிறிய துணிக்கைகளின் சேர்த்தியாகும்}

b மோட்டார் கார் ஒன்று பறப்புச்சில்லில் சேமிக்கப்பட்டுள்ள இயக்கசக்தியைப் பயன்படுத்தி இயங்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. காரின் பறப்புச் சில்லானது 300 $kgm^2$ சடத்துவத்திருப்பம் உடையது அது. அதியுயர் சுழற்சிவீதம் 4200rpm இனை அடையுமாறு மின் மோட்டார்களால் ஆர்முடுக்கப்படுகின்றது.
1. பறப்புச் சில்லில் சேமிக்கப்பட்டுள்ள உயர் இயக்க சக்தியைக் காண்க.
11. காரினை இயக்க தேவையான சராசரி வலு 15 kW ஆகும். காரானது $54kmh^{-1}$ சராசரிக் கதியுடன் இயங்குகின்றது எனக் கொண்டு கார் இயங்கும் உயர் தூரத்தைக் காண்க.
111. பகுதி b(11) உள்ள கணித்தலின்போது உமது எடுகோள் யாது?

2. a) வெப்ப இயக்கவியல் பூச்சிய விதியையும், முதலாம் விதியையும் கூறுக?
b) வெப்ப இயக்கவியல் முதலாம் விதியை நோவை வடிவில் எழுதுக?
c) சமவெப்ப செயன்முறை, சேறலில்லா செயன்முறை என்பவற்றுடன் வெப்ப இயக்கவியல் முதலாம் விதியை தொடர்புபடுத்துக.



இன்று கும்பாபிஷேகம் நடைபெறவுள்ள வல்வை வைத்தீஸ்வர ஆலயத்தின் இராஜகோபுரத்தைப் படத்தில் காணலாம்.

# மருத்துவப் பிரிவில் தேசியத் தலைவர் பயன்படுத்திய உத்திகள் தனித்துவமானது

## மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன்

தாயக விடுதலைப் போராட்டத்தில் ஈட்டப் பெரும் போர் வெற்றிகளில் பயன்படுத்தப்பட்ட போர் உத்திகளில், மருத்துவப் பிரிவில் தமிழீழ தேசியத்தலைவர் பயன்படுத்திய உத்தி - இதுவரைக்கும் எவருக்கும் புரியாதபடி தனித்துவமானதென விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி இரண்டாம் திகதி கிளிநொச்சி, பரந்தன் உள்ளிட்ட படைத்தள தொகுதி மீது நடத்தப்பட்ட பெரும் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிய போராளிகளில் - மேஜர் திவாகர், மேஜர் எஸதர் உட்பட ஒன்பது மருத்துவப் பிரிவு போராளிகளின் 6 ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மருத்துவப்பிரிவின் 'யாழ் வேள்' மருத்துவமனையில் மேஜர் திவாகர், மேஜர் எஸ்தர், மேஜர் ரோகினி, மேஜர் சுசில், லெப்.அன்பனா, வீரவேங்கை குயில்மொழி, வீரவேங்கை வேணி, வீரவேங்கை விடுதலை, வீரவேங்கை ராகுலன் ஆகிய மருத்துவப் போராளிகளாக இருந்து வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்ட பந்தலில் பொதுச்சுடரைப் புலிகளின்குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பன் ஏற்றிவைத்தார்.

மருத்துவப்பிரிவு மருந்துக் களஞ்சிய பொறுப்பாளர் மனோஜ் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து புலிகளின்குரல் போராளி வெற்றிச்செல்வி தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழவில் - மருத்துவப்பிரிவின் மாவீரர்களின் பணி தொடர்பாக போராளி மருத்துவர் அஜந்தன் உரை நிகழ்த்தினார். சிறப்புரையினை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகளின் போர் வெற்றிகளில் பயன்படுத்தப்பட்ட போராட்ட உத்திகளில், மருத்துவப் பிரிவில் தமிழீழத் தேசியத் தலைவர் பயன்படுத்திய உத்தி இதுவரை எவருக்கும் புரியாதபடி தனித்துவமானது என அவர் தனது சிறப்புரையில் குறிப்பிட்டார்.

இன்றுவரை இது எதிரிகள் உட்பட, உலகில் போர் நிபுணத்துவர்களுக்குமே புரியாத புதிர்தான். இதுவே போர் வெற்றிகளின் மூலாதாரம் எனவும் கூறிய பாலகுமாரன், கடந்த காலங்களில் லக்ஷ்மன் கதிர்காமர் - உலக நாடுகள் எங்கும் சென்று தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகப் பொய்களை பரப்பிவந்தார். இன்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உலகம் முழுவதும் சென்று உண்மைத் தன்மைகளை தெரிவித்து, தலைநகரத்துக்கு ஊடாக, அவர்களின் பாதுகாப்புக்கு ஊடாகச்சென்று உரைத்து வருகின்ற வரலாற்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது இந்த விடுதலைப் போராட்டத்தில் மாவீரர்களின் தியாகத்தாலும், சிந்தப்பட்ட குருதி ஆற்றினாலும் கிடைத்த பெரும்பெறுபேறே.

இன்று பேச்சுவார்த்தை மேசையில் தமக்குரிய கதிரைகளில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து அமர்ந்திருக்கிறார்கள். அரசதரப்பு கதிரைகளில் ஆட்கள் இல்லை. யார் இருப்பது என்று அவர்கள் குழம்பி இருக்கின்றார்கள். தமிழ் மக்களுக்கு உரிமைகளை கொடுக்காமல், பேச்சுக்களையும் நடாத்தாமல், சமாதானம் என்ற பெயரில் வெறுமனே காலத்தை நீடிக்கும் முயற்சியிலேயே அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. இந்த நிலைமை இப்படி எத்தனை நாட்களுக்குத் தொடரும் எனப் பார்ப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் போராளிக் கலைஞர்களின் நடனங்கள், கவிதைநிகழ்வுகள், பெண்கள் இசைக்குழுவினரின் எழுச்சி இசை நிகழ்ச்சி என்பனவும் இடம்பெற்றன.

# அத்தியடி சனசமூக நிலையம் அமைப்பதற்கு முயற்சிகள்

அத்தியடிப் பகுதியில் சனசமூக நிலையமோ அல்லது விளையாட்டு கழகமோ எதுவும் இல்லை. அந்த வகையில் தேசிய எழுச்சிப் பேரவையின் - அத்தியடி ஊரகக் கிளை செயலாளர் சிவஞானசேகரத்தின் முயற்சியால் புதிதாக ஓர் சனசமூக நிலையம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது பற்றி மேலும் தெரியவருவதாவது -

அத்தியடிப் பிள்ளையார் கோயில் பகுதியில் குடாநாட்டின் இடம்பெயர்வுக்கு முன்பு, அத்தியடி சனசமூக நிலையம் என்ற பெயருடன் ஓர் சனசமூக நிலையம் இயங்கிவந்தது.

ஆனால், இடப்பெயர்வால் இதன் நிர்வாகசபை உறுப்பினர்கள் வெளிநாடு மற்றும் பிறபகுதிகளுக்குச் சென்றுவிட்டதனால், இந்தச்சனசமூகநிலையம் செயலிழந்துவிட்டது.

அந்தக் கட்டடம் கோயில் பரிபாலன சபையினரால் பொறுப்பேற்கப்பட்டதுடன், சனசமூகநிலையம் செயறபடமுடியாதுபோனது.

எனினும், தற்போது பழைய நிர்வாகசபையின் போசகரும், அத்தியடி ஊரகக் கிளை செயலாளருமான சிவஞானசேகரத்தின் முயற்சியால், கோயில் பரிபாலன சபையினருடன் கலந்துரையாடி, சனசமூக நிலைத்துக்கு என நிலப்பகுதியைப் பெற்றுக்கொண்டதுடன், கட்டட நிதிக்கு என ஆலயப் பரிபாலனசபையினர் உதவியையும் பெற்றுள்ளார்.

அத்துடன், ஊரகக் கிளையூடாக அந்தச் சனசமூகநிலையத்துக்கு என கட்டட வளங்களையும் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதனால், அத்தியடி வாழ் இளைஞர்கள், கல்விமான்கள் அனைவரும் இந்த முயற்சிக்கு உதவுவதுடன், இந்தப் பகுதி வளர்ச்சிக்குப் பங்காற்றுமாறு தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். பிரதேசசெயலர் கேட்டுள்ளார். (205)

### வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களின்

# சடலங்களை எடுத்துச்செல்ல நலன்புரிச் சங்கம் நடவடிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு மரணமடையும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோரின் சடலங்களை எடுத்துச்செல்ல - நோயாளர் நலன்புரிச்சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருப்பவர்களின் சடலங்களை எடுத்துச்செல்லவே - நோயாளர் நலன்புரிச் சங்கம் உடனடி உதவிகளை வழங்குவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர், இருபதுக்கும் அதிகமான சடலங்கள் இவ்வாறு எடுத்துச்செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (111)

# இசைத் தட்டுக்கள் வெளியீட்டு விழா

நிதர்சனம் நிறுவன தர்மேந்திரா கலையகத்தின் உருவாக்கத்தில்- இசைவாணர் கண்ணனின் 'ஊர் போகும் மேகங்கள்', இசையமைப்பாளர் இசைப்பிரியனின் 'வரும்பகை திரும்பும்' பாடல் இசைத்தட்டுக்கள் வெளியீட்டு விழா - நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணிக்குக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடிஏற்றல் வரவேற்புரை, தலைமையுரை, சிறப்புரை, வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை என்பனவற்றைத் தொடர்ந்து, கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (111)

# தமிழக அகதி முகாம்களில் இருந்து பதினேழு பேர் தாயகம் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

இந்திய அகதி முகாம்களில் தங்கியிருந்த 17 இலங்கை அகதிகள் மன்னார் திரும்பினர்.

இவர்கள், கடந்த வெள்ளிக்கிழமை தென்னிந்தியா ஈரோடு மாவட்டத்திலுள்ள அகதிமுகாமிலிருந்து, அவர்கள் ஒவ்வொருவரும் தமது சொந்த பணத்தில் 3500 ரூபாவைச் செலுத்தி, சிறிய படகுகளின் மூலம் மன்னார் - பேசாலை கடற்கரையை வந்தடைந்தனர்.

நாடு திரும்பிய அகதிகளில் 06 பெண்களும், 11 ஆண்களும் அடங்குகின்றனர். இவர்கள் வவுனியா மாவட்டத்திலுள்ள இலுப்பைக்குளம், மன்னார் மாவட்டத்திலுள்ள சாவற்காடு, பேசாலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சமாதான நிலைமைகள் தொடர்வதனால், சுயவிருப்பில் நாடு திரும்பியதாகத் தெரிவித்தனர். (201)

### சாயிசேவா நிலைய போயாதின நிகழ்வு

(வண்ணை)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் போயா தின நிகழ்வுகள் - நாளை காலை 5 மணி முதல் இடம்பெறவுள்ளது. கொடியேற்றம், அஷ்டோத்திரம், பஜனை என்பன இடம்பெறும். விசேட நிகழ்வாகப் பகவானின் 80 ஆவது அவதாரதினத்தை முன்னிட்டு சாயி இலக்கியம் ஒன்று அன்றைய தினம் வெளியிடப்படும். (111)

### கும்பாபிஷேகம்

(வண்ணை)

பாலாவி தெற்கு கொடிகாமம் அருள் மிகு கந்தபுராண கந்தசாமி தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் - இன்று புதன்கிழமை காலை இடம்பெறவுள்ளது. சிவஸ்ரீ வெ.பாலச்சந்திரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறும். (111)

### தேடல் மாதாந்த சஞ்சிகை வெளியீடு

மூளாயிலுள்ள சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் - மாதம் தோறும் 'தேடல்' என்ற மாதாந்த சஞ்சிகையினை வெளியிட்டு வருகின்றது.

இந்த சஞ்சிகையில் - நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் சமூக அபிவிருத்தி செயற்பாடுகள், செவ்விக்கோவை, கிராம செயற்பாடுகள் மற்றும் பிற நிறுவன விடயங்கள் போன்றவற்றைத் தாங்கி வெளிவருவதோடு, அவை இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. (118)

### வீதியைத் திருத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் ஊடாக அல்லைப்பிட்டி செல்லும் பிரதானவீதி கடந்த 20 வருடங்களாகத் திருத்தப்படாமல் குன்றும், குழியுமாகக் காணப்படுகிறது. அதனால், இந்த வீதியூடாகச் செல்லும் பயணிகள், அவ்வூர் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன், அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இந்தவீதியை திருத்தித் தருமாறு பலதடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும், அவர்கள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது குறித்து அவ்வூர் மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர். (53)

# பழையபூங்கா வீதியை திருத்துமாறு கோரிக்கை

சேதமடைந்து இருக்கும் யாழ்ப்பாணம் பழையபூங்கா வீதியினைத் திருத்தித்தருமாறு பெருந்தெருக்கள் திணைக்களத்திடம் - சுண்டுக்குழி சனசமூகநிலைய நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த வீதி அமைந்திருக்கும் இடங்களுக்கு அருகிலேயே யாழ். மேல் நீதிமன்றமும், இரு பிரதான கல்லூரிகளும், பிரபல தேவாலயங்களும் அமைந்துள்ளமையால், இவற்றுக்குச் செல்லும் பாதசாரிகளுக்கும், மாணவர்களுக்கும் மிகவும் சிரமம் ஏற்படுவதுடன், சிறிய விபத்துக்களும் ஏற்படுவதனால், மிகவிரைவில் வீதியினைச் சீர்செய்து தருமாறு நிலைய நிர்வாகம் தனது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளது. (58)

# சட்டவிரோத மண் அகழ்வு படையினரும் ஆதரவாம்

அரியாலை - முள்ளிப்பகுதிகளில் தொடரும் சட்டவிரோத மண் அகழவுக்கு, அந்தப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் ஆதரவாகச் செயற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நள்ளிரவு வேளைகளில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு குழுவினர் - மண் அகழ்வோரைப் பிடிக்கச்செல்லும்போது, அவர்கள் தமது உழவு இயந்திரங்களை அந்தப்பகுதி இராணுவமுகாம் பகுதிக்குக் கொண்டுசென்று நிறுத்தி விடுவதாக அவர்கள் கவலை தெரிவித்தனர். (111)

# விசர் நாய் கடித்து சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் நாய்கடிக்கு இலக்கானவர் - உரியகாலத்தில் ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றத்தவறியதால், பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம், நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் நெல்லியடியைச் சேர்ந்த மயில்வாகனம் சுபானுஜன் (வயது 14) என்பவரே, மரணமானவராவார். (111)

### ஆங்கிலப் பாடத்தை

# இணைப்புமொழி ஆக்குவதன் மூலம் முரண்பாடற்ற சூழலை உருவாக்க முயற்சி

கல்வித்துறைக்கான பாரபட்ச நடவடிக்கைகள் காரணமாகவே முரண்பாடுகள் உருவாகியுள்ளன. தரமான கல்வியை வழங்குவதன் மூலமும், ஆங்கிலத்தை இணைப்புமொழியாக்குவதன் மூலமும் முரண்பாடற்ற சூழல் உருவாகும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக - யுனிசெப் இலங்கைப் பிரதிநிதி ரெட் சைபான் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மாகாணக் கல்வி அமைச்சில் வடக்கு - கிழக்கிலுள்ள 24 வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த வருடத்தில் வடக்கு-கிழக்கில் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஒன்பது மில்லியன் டொலரை செலவு செய்துள்ளது. மேலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைக்குப் பாரிய தடையாக இருப்பது ஆசிரியர் பற்றாக்குறையும் என அவர் தெரிவித்தார். (122)

சமூகநோக்கு

- கி.கமலதாஸ் -

# பஸ் பயணங்களை சுலபமாக்குவது பயணிகள் பொறுப்பா? அல்லது சாரதிகள், நடத்துநர்கள் பொறுப்பா?

தேவைகளையும், செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு மனிதனும் பிரயாணம் என்ற போர்வையைப் போர்த்துக் கொள்ள வேண்டியது கட்டாயம் ஆகும். அந்த வகையில், தரைமார்க்கப் பிரயாணமான பஸ் பிரயாணம் என்ற வட்டத்தை எடுத்துப் பார்த்தால், பல அசௌகரியங்களுக்கும், அப்பட்டமானதும், அசிங்கமானதுமான செயல்களுக்கும் மத்தியிலேதான் பயணிக்கவேண்டியுள்ளது என்றால், அதை எவராலும் மறுத்துரைக்க முடியாது.

ஏட்டிக்குப்போட்டியாகச் செயற்படும் சாரதிகள், நடத்துநர்களின் மிரட்டல்கள், இளையோர், முதியோர் என்ற வித்தியாசங்கள் இன்றி பாலியல் நோக்கில் இடம்பெறும் சீண்டல்கள், மதிப்பு, மரியாதை, நீதியற்ற செயற்பாடுகள்... என விரிந்துகொண்டுசெல்லும் இந்தப் பிரச்சினைகளுக்கு - ஒரு சிலரின் கீழ்த்தரமானதும், மடமைத்தனமானதுமான போக்குகளே பிரதான காரணமாகவுள்ளது. அதனால், ஒட்டுமொத்த சமூகமுமே பிரயாணம் செய்கின்றபோது, 'பிரயாணம் செய்பவருடன் துணைக்கு ஒருவர் செல்லவேண்டும்' என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு வருவது கேவலமான, கீழ்த்தரவிடயம் ஆகும்.

பயணிகளின் நலன்களைக் கருத்திற்கொள்ளாது, தமது வருமானம்தான் பிரதானம் என்று செயற்படும் சாரதிகளும், நடத்துநர்களும் இன்று அதிகமாக உள்ளார்கள்போல. அதனால், தமது சகோதர வாகனங்களுடன் ஏட்டிக்குப்போட்டியாகவும், கண்மூடித்தனமாகவும் வாகனங்களைச் செலுத்தமுனைகின்றார்கள். இதுபோன்ற பல விடயங்களால், எதிர்பாராது தங்களது வாகனங்களை நிறுத்துவதால், பயணிப்பவர்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகித் துன்பப்படுவது ஒருபுறம் இருக்க, அவர்கள் உடல்ரீதியாகவும், உளவியல்ரீதியாகவும் பல பாதிப்புக்களைச் சந்திக்கவும் நேரிடுகின்றது.

பட்டியில் மாடுகளை அடைப்பதுபோல, பயணிகளை ஏற்ற எத்தனிக்கும் நடத்துநர்களும், சாரதிகளும் மிதிபலகையாலும், மிதிபலகைக்கு வெளியாலும் வெளவால்போல மக்களைத் தொங்கவிட்டுக்கொண்டு செல்வதும், அவர்களைத் தகாத வார்த்தைகளாலும், மிரட்டல்களாலும் அடக்கிச்செல்லும் நடத்துநர்களால்- மக்கள் மின்கம்பம், மரம் போன்றவற்றுடன் மோதியும், தரையில் வீழ்ந்தும், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றவர்களதும், இறந்தவர்களதும் பட்டியல்கள் பல உள்ளது.

பஸ்ஸில் பயணிப்பவர்கள் விபத்துக்கு உள்ளாவதற்கு- வீதிகள் சீரின்மை, வீதி ஒழுங்கு பேணப்படாமை போன்ற சில பின்னணிக் காரணங்கள் இருக்கின்றபோதிலும், முன்னணிக்காரணமாகச் சாரதிகள், நடத்துநர்களின் கவனக்குறைவும், மதுபோதையில் வாகனம் செலுத்தல் என்பவற்றாலேயே இந்த விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றது என்று ஒரு கட்டுரையாளர் குறிப்பிட்டுச்சென்றதும், தற்போதைய நிலைமையில் வரவேற்கக்கூடிய தொன்றாகவே உள்ளது.

சாரதிகள், நடத்துநர்களின் தவறுகளுக்கும், மிரட்டல்களுக்கும் எதிர்கொண்டு பயணிக்கும் பயணிகள் - ஏனைய சில பயணிகளின் காட்டுமிராண்டிதனமான செயல்களுக்கும் முகம் கொடுக்கவேண்டியுள்ளது.

பனங்கிழங்குகள்போல மக்கள் அடுக்கப்பட்டுச் செல்லும் பஸ்களில், பல பாலியல் சீண்டல் செயற்பாடுகள் நடப்பது உண்மை. ஆனால், அவைகளைக் காணும் சிலர்- பொறுக்கமுடியாது, தட்டிக்கேட்டு நிறுத்தமுனைகின்றபோது - அந்த சீண்டல்களில் செயற்படுபவர்கள் தகுதியான பதில்களைத் தந்து வாய்களைக் கட்டிவிடுவது மட்டுமல்லாது, அதன் பிற்பாடு வாய்த்தர்க்கங்களும், கை கலப்புக்களும் ஏற்பட்டு, பயணங்கள் தாமதிக்கும் சந்தர்ப்பங்கள் பல நடந்திருக்கின்றது. சில சமயங்களில் அதைத் தட்டிக்கேட்டவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சென்ற கதைகளும் உள்ளது.

அடுத்து மதிப்பு, மரியாதை, நீதியற்ற செயல்கள் என்பார்க்கும்போது, ஒவ்வொரு சமூகத்திலும் பேணிப்பாதுகாக்க வேண்டியவர்களாகக் கொள்ளப்படும் நோயாளர்கள், முதியவர்கள், அங்கவீனர்கள், கர்ப்பிணிப் பெண்கள், மதகுருமார்கள் போன்ற பல தரப்பட்ட வர்க்கத்தினரும் பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அந்தவகையில் பஸ்ஸில் ஆசனங்களைப் பெறுவது என்றால் - ஆசனத்தில் ஆற்றலும், துடிப்பும் கொண்டவர்கள்தான் அதில் அமர்ந்திருப்பார்கள் என்ற நிலைக்கு நமது சமூகம் சென்று கொண்டிருப்பதும், மேற்குறிப்பிட்ட பலவர்க்கத்தினரைக் கண்டாலும், காணாததுபோல அவமதிக்கும் கொடூர மனிதாபிமானமற்ற செயற்பாடுகளே அதிகமாக இடம்பெற்று வருகின்றது.

இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக ஒருநாள் நான் பஸ்ஸில் பயணித்துக்கொண்டு இருக்கும்போது, யாழ்ப்பாணம் - கச்சேரி முன்பாக ஒரு பெண்மணி கைக்குழந்தையுடன் பஸ்ஸில் ஏறினார். ஏறியதும்- பஸ்ஸின் குலுக்கல்களால் அவர் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். ஆனால், ஆசனங்களில் அமர்ந்து இருந்தவர்கள், முகங்களை எங்கேயோ திருப்பிக் கொண்டு, காணாததுபோல இருந்தார்கள். அவர்களில் ஒரு மனிதாபிமானி - பிள்ளையைத் தரும்படி கேட்டார். பிள்ளையோ தாயைவிட்டு அசையாது, அழுதுகொண்டிருக்கின்றது. அதைப் பார்த்துக்கூட இரங்காத மக்களைக் கண்ட ஓர் பள்ளிச்சிறுவன் - உங்களுக்கு கண்கள் இல்லையா? நீங்கள் பிள்ளைகள் பெற்று வளர்க்கவில்லையா? என்ற கேள்விகளைத் தொடுத்து, நீதி கேட்டபோதும் - அக்கேள்விகள் பலருக்குச் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தபோதிலும், இறுதி ஆசனத்தில் உட்கார்த்திருந்த முதியவர் ஒருவர் எழுந்து அப்பெண்ணுக்கு ஆசனம் அளித்தபோது - 'நாங்கள் தூரப்போகிறம்', 'நாங்களும் காசு குடுத்துத்தான் போறம்' என்ற பதில்களையும் மக்கள் வாய்களில் மலர்ந்ததையும் கேட்கமுடிந்தது. இது மனிதாபிமானிகளின் வாய்களில் மண்ணை அள்ளிப்போடும் செயற்பாடாகும்.

இன்று பஸ் பயணத்தில் மற்றொரு பிரச்சினையாகத் தலையெடுத்து வருவது - சில்லறைப் பிரச்சினையாகும். இந்தச் சில்லறைப் பிரச்சினையால் பயண தாமதங்கள், நடத்துநர் - பயணிகள் வாக்குவாதங்களையும் ஒவ்வொரு பஸ்தரிப்பிலும் காணக்கூடியதாகவுள்ளது. அதனால், பஸ்ஸில் பயணிப்பது என்றால், சில்லறை நாணயங்களுடன்தான் பயணிக்க வேண்டும் என்ற தேவைகளும் ஏற்படுகிறது போல. எனவே, இந்தச் சில்லறைப்பணத்தினைக்கொண்டு வருவது பயணிகள் பொறுப்போ? அல்லது நடத்துநர் பொறுப்போ? எமக்குத் தெரியவில்லை.

இந்தப் பிரயாணங்களில் ஏற்ப டும் சிரமங்களைத் தவிர்ப்பதற்குச் சாரதிகளும், நடத்துநர்களும் மக்களின் நலனைக் கருத் தில் கொண்டு செயற்படுவதன்மூலமும், பயணிகள் ஒவ்வொருவரும் மனிதாபிமானத்துடனும், மனிதநேயத்துடனும் செயற்படுவதன்மூலமும் இந்தப் பயணிகள் பிரச்சினையைத் தீர்க்கலாம். ☆

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி - I

- சிவா -

# தொடரும் அகதி வாழ்வின் அவலங்கள்...

கடந்த வருடம் இந்தியாவின் மோட்டார் சைக்கிள் தயாரிப்பு நிறுவனமான ஹீரோ ஹொண்டா நிறுவனம் - ஒரு குறிப்பிட்ட வகை மோட்டார் சைக்கிள் விற்பனையில் சாதனை படைத்திருக்கின்றது என்று ஒரு செய்தியை அந்த நிறுவனத்தின் விளம்பரத்தின் வாயிலாக அறியமுடிந்தது.

இதிலே குறிப்பிடத்தக்க விடயம் என்ன வென்றால்... இந்த நிறுவனம் குறிப்பிட்ட மோட்டார் சைக்கிள் அதிகளவுக்கு விற்கப்பட்டது இலங்கையில் - அதுவும் யாழ்ப்பாணத்தில் தான் என்பதாகும்.

இதை எனது தமிழக நண்பர் சொன்னபோது நான் நம்பவில்லை. ஆனால், இங்கே யாழ்ப்பாணத்துக்கு வந்து பார்த்தபின்னர் - என்னால் அதை நம்பாமல் இருக்கமுடியவில்லை.

14, 15 வயதுப் பெடியன்களில் இருந்து 60-65 வயதுத் தாத்தாக்கள் வரை ஹீரோ ஹொண்டா, ரி.வி.எஸ்., பஜாஜ் என்று வலம் வந்ததைப் பார்த்தபோது அதிசயமாக இருந்தது.

16 வயது மதிக்கத்தக்க சின்னப் பெடியன் ஒருவன், மிதிவண்டியில் சென்ற 60-70 வயது மதிக்கத்தக்க முதியவரை, தன்னுடைய ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள் வேகமாக வந்து மோதி வீழ்த்தி காயப் படுத்திவிட்டு, அந்த முதியவர் மேலேயே பழியைப் போட்டு, அவரை இழிசொற்களால் வசைபாடி விட்டுச் சென்றதைப் பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது.

12-14 வயது மதிக்கத்தக்க இரண்டு சிறுவர்கள் - மோட்டார் சைககிள்யில் வந்த ஒரு கத்தோலிக்க மத குருவின்மீது பட்டாசைக் கொழுத்தி வீசி - அவருடன் சண்டித்தனமுறை யில் நடந்து கொண்டதைப் பார்த்தபோது வியப்பு மேலிட்டது.

மிதிவண்டியில் சென்ற இளம் பெண்களை - மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழாம் - தலைமுடியில் பிடித்து இழுத்து - அட்டகாசம் பண்ணியதை பார்த்தபோது மனம் கொதித்தது.

கொழும்பில் அச்சடிக்கப்பட்ட இலங்கைத் தமிழர் தேசவழமைகளும், தேசவழமைகளும் என்ற 200 ரூபா பெறுமதியான ஒரு முக்கிய நூல், இந்தியாவில் அச்சடிக்கப்பட்டது என்று பொய் சொல்லி, 800 ரூபாவுக்கு விற்ற - யாழ்ப்பாண நூல் விற்பனை நிலையம் ஒன்றின் - வியாபாரத்தனத்தைப் பார்த்து மனம் வெறுத்தது.

உண்மையில் யாழ்ப்பாணம் எல்லாவிதத்திலும் மாறிவிட்டது.

அதன் அடையாளம் - பண்பாடு-கலாசாரம் - கல்விப் பாரம்பரியம் எல்லாமே - தலைகீழாக மாறிவிட்டன.

சாதி, சீதனம், பிரதேசவாதம் முதலான பிற்போக்குத்தனங்கள் மறுநிர்மாணம் செய்யப்பட்டு உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் யாழ்ப்பாண சமூகத்திலிருந்த நல்ல அம்சங்கள் எல்லாம் - மெல்ல மெல்லச் செத்துக்கொண்டிருக்கின்றன.

கல்வியில் முதலாம் இடத்தில் இருந்த யாழ்ப்பாண மாவட்டம் இன்று 24 ஆம் இடத்துக்குச் சென்றிருப்பது- ஒரு வேதனையான சாதனை.

சண், சக்தி, தமிழன், ஜெயா, எஸ்.எஸ். மியூசிக் என்று தொடரும் தொலைக்காட்சிகள் - யாழ்ப்பாண வீடுகளை ஆக்கிரமித்துள்ள நிலையில் - 24 மணிநேரமும் - சின்னத்திரை தொடரும், சினிமாவுமாக மாறி மாறி காட்டப்பட, பிள்ளைகளுக்கு படிப்பு எங்கே வரும்?

சின்னப்பெட்டியில் படம் பார்த்தால் பார்த்தமாதிரி இருக்காது என்று சொல்லி அம்மாவும் - அப்பாவும் 70, 80 சென்ரிமீற்றர் தொலைக் காட்சிப் பெட்டிகளை வாங்கி வீட்டில் வைத்துப் போதாக்குறைக்கு-'டிஷ் அன்ரனா'க்களையும் வாங்கிப் பூட்டினால் - வீடே சினிமாக் கொட்டகையாக மாறினால் படிப்பு எங்கே வரும்?

பரப்பு ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் என்று இருந்த காணி விலை இப்போது, 20 இலட்சம், 30 இலட்சம் - வீட்டோடு காணி என்றால் 50, 60 இலட்சம்.

5 இலட்சம், 10 இலட்சம் என்று இந்தச் சீதனம் - இப்போது 50, 75 இலட்சம் என்று கோடியைக்கூட எட்டிவிட்டது.

எல்லாவற்றுக்கும் காரணம் பணம். வெளிநாட்டிலிருந்துவரும் பணம் - வெளிநாட்டுப் பணம் இல்லாதவர்கள் - யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை (நடை) பிணங்கள்தான். வெளிநாட்டிலிருந்து பணம் வருதோ, அங்குள்ள உறவுகள் அனுப்பும் பணத்தை இங்குள்ள உறவுகள் செலவழிப்பதோ தவறில்லை.

ஆனால், அந்தப்பணம் எப்படி வருகின்றது - அதைத் தேடுவதற்கு அங்குள்ள நமது உறவுகள் எப்படித் தங்களை வருத்துகின்றார்கள் என்பதை இங்குள்ளவர்கள் கொஞ்சமாவது புரிந்துகொண்டால், நிச்சயம இந்த வீண் ஆடம்பரங்களும் - அடையாளச் சிதைப்பும் குறையும்.

வெளிநாடு என்றவுடன் - பணத்தைச் சுலபமாகச் சம்பாதித்துவிடலாம் என்று இங்கே பலர் நினைக்கிறார்கள். ஆனால், இங்கே பணம் சம்பாதிக்க எவ்வளவு வருந்தி உழைக்கவேண்டுமோ, அதைவிட இரண்டு மடங்கு உழைப்பைச் கொடுதத்துத்தான் பணம் சம்பாதிக்கலாம் என்பதும், சுவாசிக்கும் காற்றைத் தவிர, மிகுதி அனைத்தையும் பணம் கொடுத்தே விலைக்கு வாங்கும் சூழலில் - நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் படும் கஷ்டம் பலருக்குத் தெரியாது.

உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் எழுதும் இந்தத் தொடர் - புலம்பெயர்மக்களின் அவலத்தை தாயக உறவுகளுக்குப் புரியவைக்கும் என்று நம்புகின்றேன்.

1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி பிற்பகல் 1 மணி என்று நினைக்கின்றேன்.

பாரிஸ் நகரத்தில் நிலத்துக்குக் கீழ் செல்லும் அதிவேக தொடரூந்துகளில் ஒன்றான **'RER-B'** யின் சேவை - தடங்கலுக்கு உள்ளாகிவிட்டது.

பலே றோயல் தொடரூந்து நிலையத்தில் ஒரு இளைஞர் தொடரூந்தின் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட படியினால் - இந்தச்சேவை சில மணி நேரத்துக்குத் தடைபட்டிருக்கும் என்று தகவல் சொல்லும் கணினித் திரையில் அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது.

மூன்று நிமிடத்துக்கு ஒன்று என்ற அடிப்படையில் நடைபெறும் இந்தச் சேவை தடைப்பட்டதால், அந்தத் தடத்தில் செல்லும் அனைத்து தொடரூந்து நிலையங்களிலும் கூட்டம் அலை மோதியது. அந்தத் தடத்தில் உள்ள பிரதான தொடரூந்து நிலையமான 'கார் து நோட்' இல் காத்திருந்த நானும், அந்த இளைஞரை மற்றவர்களைப்போல் மனதுக்குள் திட்டிவிட்டு வாடகைக் காரில் வீட்டிற்குச் சென்றிருந்தேன்.

ஆனால், அன்று இரவு பிரெஞ்சு தொலைக்காட்சியின் பாரிஸ் நகரத்துக்கான செய்தி அறிக்கையில் - அந்தச் சம்பவம் பற்றி சொல்லிய போது, நான் திகைத்துப் போய்விட்டேன்.

தற்கொலை செய்துகொண்ட இளைஞர் ஒரு இலங்கைத் தமிழர்.

வயது - 40.

பெயர் - மகேந்திரன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) யாழ்ப்பாண நகரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

1993 ஆம் ஆண்டிலிருந்தே எனக்கு அவரைத் தெரியும். அவரது சோகக்கதையும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இவ்வாவாறான துயரமுடிவுக்கு வருவார் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. நான் பாரிஸ் மாநகர காவல்துறையின் - தகவல் பிரிவில் தொடர்பு கொண்டு, இந்த விபத்துப்பற்றி வினவியபோது - அவர்கள் தெரிவித்த தகவல் என்னை மேலும் அதிர்ச்சியடையவைத்தது.

'அந்த இளைஞர் ஒரு எயிட்ஸ் நோயாளி' என்பதே அந்தத் தகவல்- 1980 இல் பிரான்சுக்குச் சென்று, 1993 வரை ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் இருந்த அந்த இளைஞர் - எப்படி சீரழிந்தார்? எப்படி எயிட்ஸ் நோயாளியாக மாறினார் - இது ஒரு சோகக்கதை. எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டிய கதை.

யாழ்ப்பாணம் கச்சேரி பகுதியிலுள்ள நடுத்தரக் குடும்பம் ஒன்றில் 4 தங்கைகளுடன் பிறந்த மகேந்திரன் - 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் - பாரிஸ் நகருக்கு சென்றிருந்தார். அவர் எந்த வழியால் சென்றார் - எப்படி அங்கு சென்றார் என்ற விபரங்கள் தெரியாது.

ஆனால், பாரிஸுக்குச் செல்வதற்குப் பிரயாண முகவருக்குப் பணம் செலுத்துவதற்கு வீட்டை ஈடு வைத்தது மட்டும் தெரியும். பாரிஸுக்கு அவர் சென்றபோது - அவருக்குத் தெரிந்தவர்கள், உறவினர்கள் என்று யாரும் கிடையாது. அந்தக் காலத்தில் தெரிந்தவர்கள்கூட தெரியாதவர்கள்போல நடந்துகொள்ளும் நிலை இருந்தது. காரணம் பாரிஸ் நகரத்தில், அந்தக் காலகட்டத்தில் சென்ற நம்மவர்களுக்கு இருப்பிடம் என்பது பெரிய பிரச்சினையாக இருந்தது.

பாரிஸ் நகரத்தில் அதிகரித்த வாடகைக்கு ஈடுகொடுத்து நம்மவர்களால் வீடு எடுக்கமுடியாத நிலை அப்போது இருந்தது. 20 சதுரமீற்றர் அளவுள்ள ஒரு அறையில் 15 முதல் 20 பேர் தங்கியநிலை - பகல் வேலை, இரவு வேலை என்று செய்பவர்கள் சேர்ந்து ஒரு அறையை எடுத்து - இரவு வேலை செய்பவர் பகலிலும், பகல் வேலை செய்பவர் இரவிலுமாக மாறிமாறி படுத்து உறங்கிய நிலை அப்போது இருந்தது.

ஞாயிறு விடுமுறை நாட்களில் - உறங்க இடமில்லாமல், சிலர் படுத்திருக்க சிலர் விழித்திருந்து விட்டுப் பின்னர் படுத்தவரை எழுப்பி விழித்திருக்கவிட்டு, தாங்கள் படுத்த நிலையும் இருந்தது. மகேந்திரன் சென்றபோது - சரியான குளிர், வெப்பநிலை $-1^{o}c$ இல் இருந்தது.

தொடரும்....

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்*
*குன்ற வருப விடல்*

திருக்குறள்.

## நமது நோக்கு

### கறுப்புச் சுதந்திரம்

இன்று இலங்கையின் ஐம்பத்தாறாவது சுதந்திரதினம். அந்த சுதந்திரத்தை முழுமையாக அனுபவித்துவரும் பெரும்பான்மைச் சமூகத்தவர்க்கும், அதனை அவர்களுக்கு அள்ளிவழங்கும் பேரினவாத ஆட்சியாளருக்கும் வாழ்த்துக்கள்.

இன்று தமிழ்மக்களுக்கு ஐம்பத்தாறாவது துக்கதினம். ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தமிழ்மக்களின் வாழ்வுரிமையை, சுதந்திரத்தை, சிங்களப் பெரும்பான்மையினரிடம் கையளித்த வரலாற்றுத் துரோகம் நிகழ்ந்து ஐம்பத்தாறு வருடங்களாகின்றன.

04.02.1948 இல் நிகழ்ந்த இந்த துயரநிகழ்வின் தாக்கத்தை இன்னமும் தமிழ்மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக அனுபவித்தே வருகிறார்கள். வாளேந்திய சிங்கக்கொடியொன்று, என்று இலங்கையின் தேசியக் கொடியானதோ, அன்றே தமிழினம் துயரேந்திய கருமை செறிந்த கொடியை ஏந்த ஆரம்பித்துவிட்டது.

எப்பொழுதெல்லாம் சிங்கக்கொடி தன் சுதந்திரப் பறத்தலை மேற்கொள்ளுகிறதோ அப்போதெல்லாம் தமிழ்மக்கள் கறுப்புக் கொடியை உயரத்தூக்கி இலங்கையில் நிலவும் சுதந்திரத்தின் இலட்சணத்தை அடையாளப்படுத்தியே வருகின்றனர்.

இலங்கையையும் ஜனநாயக நாடு என்றுதான் உலகம் தன் பட்டியலில் பதிந்துள்ளது.

தனது நாட்டின் பல்லின - பலமத - மக்களை சமமாக மதிக்கத் தெரியாத ஒரு ஆட்சி நிலவும் நாடொன்றுக்கு ஜனநாயக நாடென்ற பட்டத்தை வழங்கி அங்கீகரிப்பது எந்த வகையில் நியாயமென்பது தெரியவில்லை.

இன்று சமாதானத்தை வலியுறுத்திநிற்கும் நாடுகள் அனைத்தும், இந்த நாட்டில் சமாதானம் என்பதை இனிமேல்தான் ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைமை இங்குள்ளது உண்மைதான் என உணர்ந்து கொண்டுள்ளார்கள் என்பது முக்கிய விடயமாகும்.

இந்த நிலையில், இங்கு அமைதியின்மை ஏற்படக்காரணம் என்ன என்பதையும் அவர்கள்சரியான முறையில் புரிந்துகொண்டிருக்க வேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

இந்த அமைதியின்மை, சிங்களப் பேரினவாதிகளால், தமிழ் சிறுபான்மை இனம் இனரீதியில், மதரீதியில், சமூகரீதியில், பொருளாதாரரீதியில் என சகலவகையிலும் ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டதுதான் என்பதற்கு மாற்றுக்கருத்து கிடையாது.

இதனைசர்வதேச சமூகம் உணர்ந்துகொள்வதன் மூலமே, இந்த நாட்டின் பிரச்சினையை சகல பரிமாணங்களிலும் புரிந்துகொள்ள முடியும் என்பதுடன், தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத்தன்மையையும் அறிந்து அதற்கேற்ப சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவும் முடியும்.

இலங்கையில் ஒடுக்கப்படும் இனமான தமிழினம் தனது உரிமைக்காக கிளர்ந்தெழுந்து போராடுவதை பயங்கரவாதம் என்று பட்டியலிடுவதன் மூலம் ஜனநாயகத்தை பாதுகாக்கவென்று கூறிக்கொண்டு அரச பயங்கரவாதத்துக்கு அங்கீகாரமளிப்பது, ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகும். மனித உரிமைகள் மறுக்கப்படும் தேசத்தில் எந்த இனமும் சுதந்திரமாக வாழவும் முடியாது, சுயாதீனமாக செயற்படவும் முடியாது. நியாயபூர்வமான உரிமைகளுக்கான போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு இராணுவரீதியில் ஒடுக்கமுனையும் அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் விதம், ஆயுத - இராணுவ உதவிகளை வழங்குவதும் தான் மிக மோசமான பயங்கரவாதமாகும்.

இலங்கைக்கு இதுவரை ஆயுதரீதியில், இராணுவ ரீதியில் உதவி வழங்கியநாடுகளே... அரச பயங்கரவாதத்தை ஊக்குவித்து தமிழ்மக்கள் இன்றுபடும் அவலங்களுக்கு மூலகாரணமான நாடுகள் என்பதில் ஐயமில்லை.

தமிழ்மக்கள் தமது சுதந்திரத்தை மீளப்பெறுவதற்காக மேற்கொண்ட நியாயமிக்கதும், தவிர்க்கவே முடியாததுமான விடுதலைப்போராட்டத்தை, சிங்களப் பேரினவாதிகளுடன் இணைந்து அவர்களுக்கு சார்பாக ஆயுத, இராணுவ உதவிகளை வழங்கி ஒடுக்க உதவிய மனித நேயமற்ற கைங்கரியத்தைச் செய்த நாடுகளே இன்று சமாதானத்தை வலியுறுத்துவது தான் வேடிக்கையானதாகும்.

இன்றும் சில நாடுகள் தமிழ்மக்கள் தமது சுதந்திரத்திற்காகப் போராடுவதை ஏதோ தங்கள் நாட்டின் சுதந்திரத்தைப் பறிக்கவோ, குறைக்கவோ போராடுவதாக அர்த்தப்படுத்தி கருத்து வெளியிட்டு வருவதுடன், தங்கள் நாட்டினதும், மக்களினதும் நலன்களுக்காக தமிழ்மக்களின் - விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத்தமுயன்ற அநியாயத்தைச் செய்துள்ளதுடன், தொடர்ந்தும் அவ்வாறே செய்து வருவதுதான் ஜனநாயக தர்மத்துக்கு செய்யும் பெரியதுரோகமாகும்.

தமிழ்மக்கள், அதாவது ஈழத்தமிழ் மக்கள் யாருக்கும் எதிரிகளுமல்லர், எவரது சுதந்திரத்துக்கும் எதிரானவர்களுமல்லர். அவர்கள் தங்களின் வாழ்வுரிமையை சுதந்திரத்திற்காகவும், தாயகபூமியின் விடுதலைக்காகவும் மட்டுமே அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பாளர் களுக்கும், மேலாதிக்க பேரினவாத அரசுக்கும் எதிராகவே இதுவரை காலமும் போராடிவந்துள்ளார்கள், தொடர்ந்தும் போராடிவருகிறார்கள். இதனை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டிய காலம் இதுதான்.

சுதந்திரத்தை எப்படி யாசித்துப் பெறமுடியாதோ, விடுதலையை எப்படி போராடாமல் பெறமுடியாதோ, அதேபோன்று சமாதானத்தையும் அழுத்தத்தின்பேரில் கடைப்பிடிக்கவும் முடியாது என்பதும் உண்மையே. இதனையும் உலகம் உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதும் காலத்தின் அவசியமாகியுள்ளது.

தமிழ்மக்கள் இன்றையநாளில் தெரிவிக்கும் கறுப்புநாள் பிரகடனமும் இதன் பாற்பட்டதேயாகும்.

முட்கம்பிச்சுருள் வளையங்களின் சுற்றிவளைப்புக்கிடையே, காவலரண்களில் உள்ள படையினரின் துப்பாக்கிகள் எப்போதும் சுடத்தயாராக குறிவைத்தநிலையில், இராணுவ வாகனநடமாட்டங்களின் பீதி தரும் இரைச்சலுக்கிடையில் சுதந்திரம் பற்றிப் பேசுதலோ, சுதந்திரப் பாடுதலோ சாத்தியமற்றதேயாகும்.

வாளேந்திய சிங்கக்கொடியுணர்த்தும் செய்திக்கு

தமிழ்மக்கள் தரும் பதில் செய்திதான் கறுப்புக்கொடியின் அசைவாகும்.

## நாடும் நடப்பும்



## இந்தியாவிலிருந்து ஹெரோயின் கடத்திய இலங்கை வாலிபர் கைதுசெய்யப்பட்டார்!

திருச்சியில் இருந்து இராமேஸ்வரம் நோக்கி 11 கோடி ரூபா மதிப்புள்ள ஹெரோயின் கடத்திய இலங்கை வாலிபரை - பொலிஸார் கைதுசெய்தனர். இதுபற்றி தெரியவருவதாவது,

திருச்சியிலிருந்து ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்களை, கடத்தல் கும்பல் இலங்கை வழியாக வெளிநாட்டிற்கு கடத்தும் முயற்சியில் ஈடுபடுவதும், அதனைத் தொடர்ந்து மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதும் தெரிந்ததே.

இந்த நிலையில், நேற்று முன்தினம் திருச்சியிலிருந்து ஒரு குவாலிஸ்காரில் ஹெரோயின் போதைப்பொருள் இராமேஸ்வரம் நோக்கிக் கடத்தப்படுவதாக, மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்தது. இந்தத் தகவலின் பேரில் மத்திய வருவாய் புலனாய்வு பிரிவினர் திருச்சியிலிருந்து விமான நிலையப் பகுதிவரை தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது குவாயிஸ் காரில் இராமேஸ்வரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை வாலிபரை பிடித்து விசாரித்தனர். இதில் அவர் திருச்சியிலிருந்து இராமேஸ்வரத்துக்குக் ஹெரோயினைக் கடத்தி, பின்னர் இலங்கை சென்று அங்கிருந்து வெளிநாட்டிற்குக் கடத்தமுயன்றது தெரியவந்தது. இதையடுத்து அந்த இலங்கை வாலிபரை மத்திய வருவாய்ப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் கைதுசெய்தனர்.

மேலும், அவரிடமிருந்து 11 கிலோ ஹெரோயினை கைப்பற்றினர். இதன் மதிப்பு, வெளிநாட்டில் 11 கோடி என கூறப்படுகிறது. ஹெரோயின் கடத்த பயன்படுத்தப்பட்ட காரை பறிமுதல்செய்த மத்திய வருவாய்ப் புலனாய்வுத்துறை அதிகாரிகள், இது குறித்து மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் பிடிக்கப்பட்ட இலங்கை வாலிபரின் பெயரையும் வெளியிடவிலலை. அது இரகசியமாக வைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அரசின் புதிய திட்டத்தை எதிர்த்து**

## தொழில் அமைச்சுக்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டம்!

தொழில் அமைச்சுக்கு முன்னால் நேற்று 500 பேர்வரையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் அரசாங்கம் ஒரு திட்டத்தை முன்வைத்திருந்தது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில், ஒரு ஊழியர் பதவியிலிருந்து நீக்கப்பட்டால், அந்த ஊழியருக்கு உரிய நட்ட ஈட்டுத்தொகை உடனடியாக வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தின் நோக்கம் ஊழியரை எதுவித காரணமுமின்றி விலக்குவதும், விலக்கிய பின்னர் அவர்களுக்கு நட்ட ஈட்டுத்தொகையை வழங்குவதும் மட்டுமாகவே இருந்தது.

சிறிய குற்றங்களுக்குக்கூட ஒரு தொழிலாளி இந்த சட்டத்தினால் விலக்கப்படுகின்றார். விலக்கப்பட்ட தொழிலாளியால் எதுவித சட்ட நடவடிக்கையும், மேற்கொள்ள முடியாதநிலை இதில் காணப்படுகின்றது.

எனவே, இந்த நட்ட ஈட்டுமுறையை உடனடியாக இரத்துச் செய்யவேண்டும் என்று கோரியே, தொழிலாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (01)

**சுதந்திர தினத்தை முன்னிட்டு**

## வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு இன்று மாபெரும் ஊர்வலம்

வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு சுதந்திரதினத்தை முன்னிட்டு - மாபெரும் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த ஊர்வலம், திருகோணமலையில் இன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. சுதந்திரதினமான இன்று, சுதந்திரதினத்தை எதிர்க்கும் வகையில், இந்த ஊர்வலம் ஒழுங்கு செய்யப்படடுள்ளது. உண்மையான விடுதலையை இலங்கையில் பிரகடனப்படுத்தவும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவுமே இந்த ஊர்வலம் நடத்தப்படவுள்ளது.

வவுனியா, அம்பாறை, திருகோணமலை மாவட்ட சிங்கள அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்கவுள்ளனர். வடக்கு - கிழக்கில் இன்னமும் சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு முழுமையான பாதுகாப்பு இல்லை என்றும், அவர்களுக்கு இன்னமும் சுதந்திரம் வழங்கப்படவில்லை என்பன போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்ட்டுள்ளன. (01)

## தனியார் போக்குவரத்து சபையினரின் வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது

தனியார் போக்குவரத்து சபையினால் நடத்த இருந்த வேலைநிறுத்தப் போராட்டம், கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவக்கப்படுகிறது. லீசிங் முறையில் வாகனங்களைக் கொள்வனவு செய்யும்போது, வற்வரியை அறவிடக்கூடாது என்றே தனியார் போக்குவரத்து சபை எதிர்வரும் 06 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்திருந்தது.

பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பாக ஆலோசனை ஒன்றை வழங்கியிருந்தார். வாகனங்களை கொள்வனவு செய்யும்போது, லீசிங் முறையில் கொள்வனவு செய்யப்படும் கட்டணங்களைச் செலுத்தினால், வற்வரி அறவிடப்படமாட்டாது என்று தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, தனியார் போக்குவரத்து சபையினர் 06 ஆம் திகதி மேற்கொள்ள இருந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது. (01)

## தேர்தல் ஒன்று அறிவிக்கப்படுமானால் அதனை நடத்த நாம் தயாராகவுள்ளோம்

**தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு**

நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று அறிவிக்கப்படுமானால், அதனை நடத்துவதற்கும் தாங்கள் தயாராக இருப்பதாக தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது. எவ்வாறாயினும் மாகாண சபைத்தேர்தலுக்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக, தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆயினும், மாகாண சபைத்தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றால், அதனையும் நடத்த தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

சிலவேளைகளில் மாகாணசபைத் தேர்தல்களும், நாடாளுமன்றத் தேர்தல்களும் ஒரேதினத்தில் நடைபெற்றால், அதனையும் எதிர்நோக்க தேர்தல் திணைக்களம் தயார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறான தேர்தல் அறிவிக்கப்பட்டால், தற்போது தேர்தலுக்கு பயன்படுத்தப்படுகின்ற அதிகாரிகளையும் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும் என்று தெரிவித்த அந்த அதிகாரி, வாக்களிப்பு மத்திய நிலையங்களிலும் சில மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

செய்திக்கட்டுரை

தமிழில்: "கூடலூரான்"

# பகட்டெதுவும் இல்லாமல் பணிபுரியும் சுவிஸ் ஜனாதிபதி



இந்த ஜனாதிபதி தனது பணிமனைக்கு வருவதும் மீண்டு வீடுசெல்வதும், பேருந்திலும் புகையிரதத்திலும் ஆகும். வழமையாக இவர் காலையில் தனது பணிமனைக்கு நடந்து வருவார். மதிய போசனத்திற்கு வீடு செல்வது பேருந்தில்.

இங்கு சொல்லப்படுவது ஒரு சாமானியமான மனிதரைப் பற்றியல்ல. உலகத்திலேயே ஜனநாயகம் அதிஉச்ச மட்டத்தில் செயற்படும் ஒரு நாட்டின் ஜனாதிபதி பற்றியாகும். அந்த ஜனாதிபதியின் செயலகத்தில் பத்து வருடங்கள் கடமையாற்றிய அலுவலர் ஒருவருடனான நேர்காணல்.

**கேள்வி:** உங்களுடைய ஜனாதிபதியின் மாளிகை எங்குள்ளது?

**பதில்:** எங்கள் ஜனாதிபதிக்கு மாளிகை மட்டுமல்ல, ஒரு முற்றத்துடன்கூடிய வீடுகூட இல்லை. அவர் மாடிவீடொன்றில் வாடகைக்குக் குடியிருக்கிறார்.

**கேள்வி:** அவருக்கு வீட்டுப் பணியாட்கள் எத்தனைபேர் உள்ளனர்?

**பதில்:** சுவிற்சர்லாந்தில் ஒருவரும், எத்தனை வீட்டுவேலையாட்கள் இருக்கின்றார்கள் எனக்கேட்பதில்லை. ஏனெனில், ஒருவருக்கு வீட்டுவேலைக்கு ஒருவர் இருந்தால்கூட, அவர் அதிர்ஷ்டமுள்ளவராகவே கருதப்படுவார். எனினும், எங்கள் ஜனாதிபதிக்கு இருப்தெல்லாம் ஒரு பகுதிநேர வீட்டுப்பணிப்பெண் மட்டுமேயாகும். அவர் ஜனாதிபதியின் துணைவியாருக்கு உதவுகிறார். ஜனாதிபதியின் துணைவியார் விரிவுரையாளராவார்.

**கேள்வி:** உங்கள்' ஜனாதிபதி அடிக்கடி வெளிநாட்டுப்பயணம் மேற்கொள்ளுபவரா?

**பதில்:** ஒருபோதும் இல்லை. ஜனாதிபதியாக இருக்கும்வரை, வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளுவதற்கு அனுமதிகிடையாது. அது எங்கள் நாட்டின் சட்டம்.

**கேள்வி:** ஒவ்வொரு வருடமும் உங்களுடைய ஜனாதிபதி எத்தனை ஜனாதிபதிகளுக்கும், தேசத்தலைவர்களுக்கும் உங்கள் நாட்டுக்கு வரும்படி அழைப்பு விடுக்கின்றார்.

**பதில்:** அதிகபட்சம் இருவருக்கு மட்டுமே! இந்த வருடம் ஒருவர் மட்டுமே. அது உங்கள் நாட்டு ஜனாதிபதி.

**கேள்வி:** உங்கள் ஜனாதிபதி எவ்வளவு நேரம் தனது கடமைகளில் ஈடுபடுவார்.

**பதில்**: சரியான கடமை நேரம் 9 மணித்தியாலங்கள், தினந்தோறும் காலை 7.30 மணி தொடக்கம் - பிற்பகல் 12.30 வரைக்கும், பின்னர் பிற்பகல் 2.30 தொடக்கம் மாலை 6.30 வரைக்குமாகும். ஆனாலும், பெரும்பாலான நாட்களில் ஜனாதிபதி காலை 7.00 மணிக்கு முன்னரே பணிமனைக்கு வந்துவிடுவார். அவருடைய அந்தரங்கச் செயலர், காலை 7.30 மணிக்கு வருவார். சிலவேளைகளில் இரவு 7.30 அல்லது 8.00 மணிவரைக்கும் அவர் கடமையாற்றுவார். எஞ்சியுள்ள வேலைகளை வீட்டில்வைத்துச் செய்வதற்காகக் கொண்டு செல்வார்.

**கேள்வி:** அப்படியான கோப்புக்கள், ஆவணங்கள் ஆகியவற்றைக் காவிக்கொண்டு செல்வது யாா?

**பதில்:** ஜனாதிபதியே காவிக்கொண்டு செல்வார். எங்கள் பணிமனைகளில் பியோன்மார் இல்லை.

**கேள்வி:** அரசாங்கத்தின் ஜனாதிபதியிடம் எத்தனை கார் உள்ளன?

**பதில்:** ஒன்று கூட இல்லை. அவர் பணிமனைக்கு வருவதற்கும், வீட்டுக்குப்போவதற்கும் பேருந்திலோ, அன்றேல் புகையிரதத்திலோ செல்லவேண்டியுள்ளது. வழமையாக காலையில் பணிமனைக்கு நடந்துவருவார். மதியபோசனத்துக்கு வீட்டுக்குப் பேருந்தில் செல்வார்.

**கேள்வி:** பேருந்தில் பயணிகள் நிறைந்திருந்தால் என்ன செய்வார்.

**பதில்:** மற்றைய பயணிகள் போன்று ஜனாதிபதியும், பேருந்தில் நின்றுகொண்டு பயணஞ் செய்வார். அவர் இருந்துகொண்டு பயணஞ் செய்யும் சந்தர்ப்பங்களில் பெண் பயணி ஒருவருக்கு இருக்க ஆசனம் இல்லாவிட்டால் அவர் எழுந்து நின்றுகொண்டு தனது ஆசனத்தினை அந்தப் பெண்மணிக்கு வழங்குவார்.

**கேள்வி:** சுவிர்சலாந்து தேசிய தினத்தில் நீங்கள் கோடீஸ்வரர்கள் 2000 அல்லது 3000 பேருக்கு அழைபபு விடுக்கிறீர்களா?

**பதில்:** தேசிய தினத்திற்கு ஒருவருக்கும் அழைப்பு விடுவதில்லை. மக்கள் தங்களுடைய செலவிலேயே தேசியதினத்தைக் கொண்டாட வேண்டுமென அரசு எதிர்பார்க்கிறது. மக்கள் சகல கிராமங்களிலும் மிக உற்சாகத்துடன் இந்த விழாவினைக் கொண்டாடுகிறார்கள்.

**கேள்வி:** ஜனாதிபதிக்கும், ஏனைய அரச அலுவலர்களைப்போல் வார இறுதியில் இரண்டு நாட்கள் விடுமுறை கிடைக்கின்றதா?

**பதில்:** ஜனாதிபதி சனிக்கிழமைகளிலும் கடமையிலீடுபடுகின்றார். தினமும் கடமைக்கு வருகின்றார். அவருடைய செயலருக்கும் சனிக்கிழமைகளில் விடுமுறை இல்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் தன்துணைவியாருடன் மலைப்பிரதேசத்துக்குச் சென்றுவிடுவார். அவர் இயற்கையை மிகவும் நேசிப்பவர்.

**கேள்வி:** மற்றைய நாடுகளில் ஜனாதிபதிகளுக்கு உள்ளதுபோன்று உங்கள் ஜனாதிபதிக்கும் தனியான பாதுகாப்புப்படை ஒன்று உள்ளதா?

**பதில்:** இல்லை. ஜனாதிபதியினைப் பாதுகாப்பதற்கு ஒருவரும் தேவையில்லை. மக்கள் அவர்பால் கொண்டுள்ள அன்பே அவருக்குச் சிறந்த பாதுகாப்பாக இருக்கின்றது. அவருடைய பணிமனையைச் சுற்றிக்கூட பொலிஸ் நிற்பதை நீங்கள் காணமாட்டீர்கள். அவருடைய பணிமனை அமைந்துள்ளது ஒரு சிறியதீவில். அதற்குள் எவரும் நுழையலாம். இலகுவாக அந்தரங்கச் செயலாளருடைய அறைக்குள் செல்லலாம். அப்படிச் செல்லு[illegible] ஒருவரைத் தடுப்பதற்கு ஆயுதந்தரித்த காவலாளிகள் ஒருவர்கூட இல்லை.

சுவிற்சர்லாந்தினுடைய ஜனாதிபதி அப்படிப்பட்ட ஒரு மனிதர். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலிருந்து 2003 டிசம்பர் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை லங்காதீபவில் பிரசுரமாகியுள்ளது.

செய்திக் கட்டுரை

- பெனடிக்ற் ராதா

# எய்தவன் இருக்க அம்பை நோவதேன்

சட்டவிதிமுறைகளுக்கு முரணானதும், ஒரு தனிநபரது எண்ணத்திற்கு ஆதரவாகவும் யாழ். உதைபந்தாட்ட லீக் துணைபோவதையும் எம்மால் ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியும். புள்ளி விபரங்களுடன் எந்தவகையிலும் விவாதிப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம். பாடுமீன் கழகப் பிரதிநிதி லீக்கில் அங்கம் வகிக்கிறார் என்பதற்காக, தங்களின் நடவடிக்கை எந்த வகையிலும் நியாயமானது என்று ஏற்றுக்கொள்ள முடியாது! ஏனெனில் 'எய்தவன் இருக்க அம்பை நோகும் செயலுக்கு' ஒப்பானது.

குழப்பம் ஏற்படக்காரணமானவர் மத்திஸ்தர் இதை எம்மால் நிரூபிக்கமுடியும், தொடர்ந்து குழப்பங்கள் ஏற்பட, பாடும்மீன் கழகப் போட்டிகளில் சம்மந்தப்பட்ட மத்தியஸ்தர்களே கடமையாற்றியுள்ளார்கள். காரணமானவர்கள் மீதும் அவர்கள் சார்ந்த சங்கத்தின்மீதும் நடவடிக்கை மேற்கொள்ள சட்டவிதிமுறைகள் லீக்கிற்கு தெரியவில்லையா? பாடுமீன் கழகத்தின் மீதும், வீரர்களின் மீதும் நடவடிக்கை மேற்கொண்டதுதான் லீக்கிற்கு தெரிந்த புதிய சட்டவிதிமுறையோ? அப்படியான அந்த விதியையும், எத்தனையாவது பிரிவு என்பதையும் வெளிவிடவும்.

சென் அன்ரனிஸ் கழகப்போட்டியில் குழப்பம் ஏற்பட்டு, மத்தியஸ்தராக கடமையாற்றிய பிரான்சிஸ் என்பவரை, அன்ரனீஸ் கழக வீரர்கள், ஆதரவாளர்கள் தகாதவார்த்தைகளால் ஏசியும், தாக்குவதற்கும் முற்பட்டதுமல்லாமல் அவரது வீடுதேடிப்போய் தாக்கமுயற்சித்தார்களே, அவர்கள் மீதோ அவர்கள் சார்ந்த கழகத்தின் மீதோ - லீக்கோ, லீக்நடவடிக்கைக் குழுவோ இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளாதது ஏன்? மத்தியஸ்தர் சங்கத்தில் இருப்பவர்கள் லீக்கில் பதவிவகிப்பதாலா? அல்லது போட்டிகளில் கலந்துகொள்ள தகுதியில்லாத கழகங்களின் பிரதிநிதிகள் பதவிவகிப்பதாலா?

தனி நபரது எண்ணத்திற்கு லீக் துணைபோவது என்பதுதான் உண்மைநிலை, இதை நிரூபிக்க இன்னுமொரு உதாரணம் - 1993 ஆம் ஆண்டில் யாழ்.லீக் 'பொன்விழா' மலர் வெளியிட்டது. அப்போதைய லீக் தலைவராக இருந்தவர் தற்போதைய ஒழுக்காற்றுக் குழுத் தலைவர். அப்போதைய செயலாளராக இருந்தவர் இப்போதைய லீக் தலைவர். இவர் சார்ந்த கழகத்தின் சாதனைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனால், யாழ்.லீக்கில் உண்மையிலேயே பல சாதனைகள்புரிந்த பாடுமீன் கழக சாதனைகள் இருட்டடிக்கப்பட்டுள்ளது.

லீக் தலைவர் கிண்ணத்திற்கான போட்டியிலே தொடர்ந்து 4 வருடங்களாக வெற்றியீட்டி சம்பியனானது. முதன் முறையாக அறிமுகபபடுத்தப்பட்ட 13 வயதினருக்கான போட்டியிலும் சாம்பியனானது பாடுமீன் கழகமே. லீக் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட 7பேர் கொண்ட போட்டிகளில் **A+B** என இரண்டு அணிகளாக கலந்துகொண்டு முதலாவது, இரண்டாவது இடத்தையும் 3 தடவைகள் தட்டிக்கொண்ட கழகமும் பாடுமீன் கழகமே. யாழ்.லீக் தெரிவுக்குழுவில் 9 வீரர்கள் போட்டியில் கலந்தும், 2 வீரர்கள் பதில் வீரர்களாக நின்றும் தெரிவுக்குழு வெற்றிபெற காரணமானவர்களும் பாடுமீன் கழகமே.

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் 'ஜொலிஸ்ரார்' விளையாட்டுக்கழகம் நாடத்திய 7 பேர் கொண்ட 'மின்னொளி'ப் போட்டியில், 3 வருடங்கள் தொடர்ச்சியாக வெற்றியீட்டிய கழகமும் பாடுமீன் கழகமே. இலங்கை உதைபந்தாட்ட சங்கம் நடாத்திய 'அமரர் பண்டாரநாயகக' கிண்ணத்திற்கான போட்டியில் கலநது கொண்டு, அரை இறுதிவரை முன்னேறிய கழகம். உதவி அரச அதிபர் பிரிவு 19 வயதிற்குட்பட்டோருக்கான போட்டியிலும் அகில இலங்கைச் சாம்பியனாக வெற்றிபெற்ற கழகமும் பாடுமீன் கழகமே.

இப்படியாக சாதனைகள் புரிந்த கழகத்தின் சாதனைகள் பொன் விழா மலரில் இருட்டடிக்கப்பட்டதன் நோக்கமென்ன? குழப்பத்தில் முடிந்த போட்டி தொடர்பாக, வீரர்கள் மீது பொலிஸாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வழக்கு நடைபெற்றுக் கொண்டிரு[illegible]கிறது. அவர்கள் குற்றவாளிகளா? நிரபராதிகளா என தீர்ப்பு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் யாழ்.லீக் வீரர்கள்மீதும், பாடுமீன் கழகத்தின் மீதும் தடைவிதித்துள்ள தன் நோக்கமென்ன? கழகத்தடை நீக்கப்படாதவரை இன்னொரு லீக்கும், மத்தியஸ்தர் சங்கமும் உருவாகும் நிலை தவிர்க்கமுடியாதது.



## மின்கட்டண அதிகரிப்பு செய்தியை அரசு மறுக்கிறது

மின்சாரக்கட்டணங்களை அதிகரிபபதற்கு ஐ.தே.முன்னணி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானவையென அரசாங்கம் அறிவித்துள்ளது.

தறபோது நிலவும் வரட்சி காரணமாக நீர், மின்சார உற்பத்தியை தற்காலிமாக நிறுத்தி, அனல் மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அரச ஊடகப் பேச்சாளர் அலுவலகம தெரிவித்துள்ளது.

குடியிருப்பாளர் பாவிக்கும் 400 அலகு மின்சாரத்துக்கு எவ்வித மாற்றமும் இல்லை. இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு அலகுக்கும் தலா ஒரு ரூபா அறவிடப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தொழிற்சாலைகளில் 1000 அலகுகளுக்கு மேலதிகமாக மின்சாரம் பாவிக்கப்பட்டால், ஒவ்வொரு மேலதிக அலகுக்கும் ஒரு ரூபா அறவிடப்படும். முதல் 40 அல்குகள் வரை மின்கட்டணத்துடன் 'வற்' வரி அறவிடப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(01)

# ஜப்பானின் 80 துருப்பினர் அடங்கியகுழு நேற்று ஈராக் நோக்கிப் புறப்பட்டது!



ஜப்பானியத் துருப்பினர் 80 பேர் அடங்கிய குழுவொன்று நேற்று ஜப்பானிலிருந்து புறப்பட்டு குவைத் சென்றுள்ளது. குவைத்தில் சிறிதுகாலம் தங்கியிருந்த பின்னர் இந்தக்குழு ஈராக்கின் தென்பகுதிக்குச் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

இத்துருப்பினர் குவைத்தில் தங்கியிருக்கும் துருப்புகளுடன் இணைந்து ஈராக்கிய மக்களின் அடிப்படைத் தேவைகள் - குறிப்பாகக் குடிநீர் வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றைச் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஜப்பானின் கீழ்ச்சபையில் இவற்றிற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும பிரதேசமொன்றில் - 2 ஆவது உலக யுதத்தின் பின்னர், ஜப்பான் தனது படைகளை முதன்முதலாக அனுப்பிவைத்துள்ளது.

ஜபபானில் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் - ஜப்பானின் மக்கள் தொகையின் அரைபங்கானவர்கள், படைகளை ஈராக்கிற்கு அனுப்புவதற்குத் தமது எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தனர்.

ஜப்பானின் அரசியலமைப்பில் சர்வதேச நாடொன்றின் உள்நாட்டுப் போரில் படைகளை அனுப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால், தாக்குதல் ஒன்று ஏற்படும்போது தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், எதிர்த்தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கும் இவர்களுக்கு அதி கா்ரம் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக ஜப்பானியப் பிரதமர் கருத்துத் தெரிவிக்கும்போது-சர்வதேச சமூகத்திற்குப் பணிபுரிவது மிகமுக்கியமானதொன்றெனக் குறிப்பிட்டிருந்தார்.

எதிர்வரும மார்ச் மாதமளவில் ஜப்பானியத தரைப்படையினர், 400 விமானப்படையினர் மற்றும் கடற்படையினர் ஈராக்கில் கடமையாற்றவுள்ளனர்.

# சமய சின்னங்களை அணிவதற்கு பிரான்ஸ் மாணவருக்குத் தடை!

பிரான்ஸில் அண்மையில் உருவாக்கப்பட்டிருந்த சட்டமொன்றின் மூலம் பாடசாலைகளில் மாணவர்கள் சமயச்சின்னங்களை வெளிப்படையாக அணிவது தடைசெய்யப்படவுள்ளது.

விடுமுறைக்குப் பின்னர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்போது இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின்மூலம் - முஸ்லிம் பெண்களின் பர்தா, முஸ்லிம் ஆண்களின் தொப்பி, சீக்கியர்களின் தலைப்பாகை, பெரிய சிலுவைகளைக் கழுத்தில் அணிதல் ஆகியன தடைசெய்யப்படவுள்ளது.

பிரான்ஸ் மக்களின் கணிசமான தொகையினர் இந்தச் சட்டத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்தனர். ஆனால், முஸ்லிம், மற்றும் கிறிஸ்தவ சமூகங்களிடையே இந்தச் சட்டம் பலத்த எதிர்ப்புகளை உருவாக்கியுள்ளது.

இதனால் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் பலர் மசோதா தொடர்பான விவாதத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விவாதத்தை பிரதமர் ஜூன் பிரியர் ரபரின் நாடாளுமன்றத்தில் ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

விவாதத்தில் 140 அங்கத்தவர்களும், 577 கீழ்ச்சபை உறுப்பினர்களும் கருத்துக்களை வெளியிடுவதற்குச் சம்மதம் தெரிவித்தனர்.

விவாதம் மூன்று நாட்கள்வரை நடைபெறும் எனவும், இதற்கான வாக்கெடுப்பு அடுத்தவாரம் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிர இது தொடர்பாக மதவாதிகள் தமது கருத்துக்களைத தெரிவிக்கும்போது -




குரானின் போதனையில் சொல்லப்பட்டதுபோல் - பர்தா முஸ்லிம் பெண்களிடம் காணப்படவேண்டிய தண்டக்கத்தை வெளிப்படுத்துவதாகவும், சீக்கியர்களின் தலைப்பாகை அவர்களின் கலாசாரத்தின் அடையாளமாகவும், சமயத்தின் சின்னமாகவும் தென்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச்சட்டம் தொடர்பாக ஜனாதிபதி ஜக் ஷிராக் கருத்துத் தெரிவிக்கையில் -

தனது நாட்டில் மதச்சார்பின்மையைப் பலப்படுத்துவது அவசியமானதெனவும், இந்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் முஸ்லிம் மாணவிகள் தமக்கென தனியான பாடசாலைகளை நாடவேண்டிவரலாமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

# தொடர்மாடி இடிந்து வீழ்ந்ததில் பன்னிரண்டு பேர் கொல்லப்பட்டனர்

## துருக்கியில் சம்பவம்

(அங்காரா)

துருக்கியில் சனநடமாட்டம் மிகுந்த நகரான கொன்யாவில் தொடர்மாடிக்கட்டடமொன்று இடிந்து விழுந்ததில் - 12 பேர்வரை கொல்லப்பட்டும், 25 பேர்வரை காயமடைந்துமுள்ளதாக ஆளுநர் அகமட் கான் தெரிவித்தார்.

தனித்தனியாக 40 மாடிகளைக்கொண்ட கட்டடமே இடிந்து வீழ்ந்துள்ளது. இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்களை மீட்கும் பணியில் மீட்புப்பணியாளர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் இடிபாடுகளிலிருந்து அவலக்குரல்களைக் கேட்கக்கூடியதாகவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதுவரை காப்பாற்றப்பட்டுள்ளவர்கள் தொடர்மாடியின் மேல் வசித்தவர்கள் எனக் கருதப்படுகின்றது. இந்த விபத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என விவசாய அமைச்சர் சாமி குகுலூ தெரிவித்தார்.

எரிவாயுக் குழாயின் கசிவினால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்ற கருத்து மறுக்கப்பட்டுள்ளது. இதனால், தொடர்மாடியின் கட்டட அமைப்பில் காணப்பட்ட பலவீனமே கட்டடம் உடைந்து விழுவதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

துருக்கியில் கடந்தகாலங்களில் பூமியதிர்ச்சியினபோதும் இயற்கை அனர்த்தங்களின் போதும் பல கட்டடங்கள் இடிந்துவிழுந்துள்ளன இதற்குப் பலவீனமாக கட்டட அமைப்புகள் காரணமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. கடந்த சனிக்கிழமை இஸ்தான்பூலின் மத்திய பகுதியில் - மரத்தினால் அமைக்கப்பட்டிருந்த வீடு ஒன்று நொருங்கிவிழுந்ததில் 6 பேர்வரை கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சந்திரனிலிருந்து பூமிக்கு வெகுவிரைவில் மின்சாரம்

உலகம் இயங்க முக்கிய ஆற்றல் சக்திகளாக விளங்குகின்ற பெற்றோல், எரிவாயு, யுரேனியம் போன்ற பொருட்களைச் சந்திரனில் இருந்து கொண்டுவரமுடியும் என்று ரஷ்ய விஞ்ஞானி எரிக்காலிமோவ் கூறியுள்ளார்.

யுரேனியம் தாது, அணு உலைகளில் மின்சார உற்பத்திக்கு முக்கிய பொருளாக பயன்படுகிறது. பெற்றோல் மற்றும் எரிவாயுக்களின் பயன்பாடு பற்றி சொல்லாமலே புரியும். இந்நிலையில் காலிமோவ் அவற்றைச் சந்திரனிலிருந்து கொண்டுவர முடியும் என்று தெரிவித்துள்ளார்.

சந்திரனிலிருந்து மின்சாரம் தயாரிக்க முடியும் என்றும், பூமியின் 1000 வருடங்களுக்குரிய மின்தேவையைச் சந்திரனிலிருந்து எடுக்கப்படும் மின்சக்தி பூர்த்திசெய்யும் என்று அவர் கூறுகிறார்.

அணு உலைகளில், அணுசக்தி உற்பத்திக்கு ஹுலியம் 3 என்ற தாது மிகவும் முக்கியமான மூலப்பொருளாக விளங்குகிறது. இந்தத் தாது 50 கோடி டன் எடை அளவில் சந்திரனின் மேற்பரப்பில் உள்ளது. அணு உலைகளில் இந்தத் தாது முக்கிய எரிபொருளாக பயன்படுத்தப்படலாம். மேலும் இதைப்பயன்படுத்துவதன் மூலம் அணுக்கதிர் வீச்சு ஏற்படாது. இதனால் அணு உலைக்கழிவுகளின் மூலம் கதிர்வீச்சு அபாயம் ஏற்படுமோ என்ற அச்சம் தேவையில்லை என்கிறார் காலிமோவ்.

மேலும் அவர் கூறுகையில் - விண்கலங்களை சந்திரனுக்கு அனுப்பி, அங்குள்ள யுரேனியம், ஹுலியம் 3 போன்ற ஆற்றல் மூலங்களை பூமிக்குக் கொண்டுவரும் செலவு தற்போது அணு உலைகளில் ஆற்றல் உருவாக்கத்திற்காக செய்யப்படும் செலவைவிட 10 மடங்கு குறைவானது என்றும் தெரிவித்தார்.

பெற்றோல், எரிவாயு, யுரேனியம் போன்ற பொருட்கள் 2150 ஆண்டோடு தீர்ந்துவிடும் என்று தற்போது கணக்கிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### ஈராக் பேரழிவு ஆயுத விவகாரம்

# சுதந்திர விசாரணைக்குழு முன் ரொனி பிளேயர்மீது விசாரணை!

(லண்டன்)

ஈராக்கின்மீது அமெரிக்கா போர்தொடுத்ததற்கு சுதந்திரமான விசாரணைக்குழு ஒன்றை அமைப்பது தொடர்பான அமெரிக்க ஜனாதிபதியின் தீர்மானத்தின்பின் அதேபோன்ற சுதந்திர விசாரணைக்குழுவொன்றை பிரித்தானியாவிலும் அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்படவுள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

பிரித்தானியாவின் வெளிநாட்டமைச்சரின் கருத்துக்கமைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்-பிரதமர் ரொனி பிளேயரிடம் ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட அணு ஆயுதப் பரிசோதனை தொடர்பான கருத்துகளை அறிந்துகொள்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.

ஆறுபேரைக்கொண்ட இந்த விசாரணைக்குழுவுக்கு - முன்னாள் பிரதமர் மாக்கிரெட் தட்சர் மற்றும் தற்போதைய பிரதமர் ரொனி பிளேயர் அரசில் அங்கம்வகித்தவரும் முன்னாள் நாடாளுமன்றச் செயலாளருமான பட்லர் ஆகியோர் தலைமைதாங்கவுள்ளனர். ஈராக்கின்மீது போர்தொடுப்பதற்குச் சேகரிக்கப்பட்ட புலனாய்வுத் தகவல்கள் சரியா என்பதைவிட, அது தொடர்பாக எடுக்கப்பட்ட அரசியல் கணிப்பீடே முக்கியமாக மிதவாதக் கட்சிகளினால் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக பி.பி.ஸியின் அரசியல் செய்தியாளர் தெரிவித்தார்.

இதனிடையே 1982 ஆம் ஆண்டு பிரித்தானிய - போக்லண்டின்மீது போர் தொடுத்திருந்தது. ஆனால், அதற்குமுன்னரே போக்லாண்டின்மீது போர்தொடுப்பதற்கு ஆர்ஜென்ரினா திட்டமிட்டிருந்தது. இதனால் அதிக அளவிலான பிரித்தானியப் படைகள் இப்போரின் தேசத்திற்கு உள்ளாகின. இதற்கு புலனாய்வுத் தகவல்களை முறையாகப் பெற்றுக்கொள்ளாமையே காரணம் எனக்காரணம்காட்டி அதனை ஆராய்வதற்கு 'பிராங்' விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

# அணுவாயுத பேச்சுக்களில் மீண்டும் அமெரிக்கா, வடகொரியா ஈடுபடும்!



வடகொரியாவின் அணுவாயுதத் திட்டங்களை அறிந்துகொள்வதற்கு - சென்ற ஓகஸ்ட் மாதம நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் முடிவு எதுவும் காணப்படாத நிலையில் நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் இந்தப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு வடகொரியா சம்மதம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, சீனா, ஜப்பான், தென்கொரியா, ரஷ்யா, வடகொரியா ஆகிய நாடுகள் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்குகொண்டிருந்தன.

2002 ஆம் ஆண்டு வடகொரியா தம்மிடம் சட்டவிரோதமான அணு ஆயுதங்கள் உள்ளன எனத் தெரிவித்த கருத்துக்களின் பின்னர் இந்தப் பேச்சுவார்த்தை ஆரம்பமானது குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவுள்ளதாகவும் அமெரிக்கா, வடகொரியா உட்பட முன்னர் பங்குகொண்ட நாடுகள் கலந்துகொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கே.சி.என்.ஏ செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

சீனா, வடகொரியா ஆகிய நாடுகள் மீண்டும் இப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முக்கிய பணியினை மேற்கொண்டுள்ளன.

அணுவாயுதங்கள் தொடர்பான பேச்சில் ஏற்பட்டிருந்த தளர்வுநிலை - ஆபத்தானதும், உறுதியற்றதாகவும் அமைந்திருந்ததாக அமெரிக்காவின் இராஜாங்க உதவிச் செயலர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் திங்கட்கிழமை கருத்துத் தெரிவித்திருந்தார்.

அணுவாயுத உற்பத்தியை நிறுத்துவதானால் அமெரிக்கா பொருளாதார உதவிகளைத் தமக்கு வழங்கவேண்டும் எனவும் தாக்குதல் எவ்றையும் மேற்கொள்ளக்கூடாதெனவும் வடகொரியா தெரிவித்திருந்தது. ஆனால், அணுவாயுதங்களை உற்பத்திசெய்யும் அமைபபுக்களை முதலில் அகற்றவேண்டுமென அமெரிக்கா தெரிவித்திருந்தது.

சென்ற ஆண்டு அமெரிக்க குழுவொன்று அணுவாயுதங்கள் தொடர்பான அமைப்புக்களை பார்வையிடுவதற்கு வடகொரியா சென்றிருந்தது.

அவ்வேளையில் அணுவாயுதங்களை ரகசியமான முறையில் உற்பத்தி செய்வதற்கு உபயோகித்த அமைப்புக்களைப் பார்வையிட நேர்ந்ததாகத் தெரிவித்திருந்தது.

அமெரிக்கா, வடகொரியா ஆகிய நாடுகளிடையே நம்பிக்கையின்மை அதிகரித்துள்ளதாகவும், இதனால் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ள பேச்சுவார்த்தையில் சமரசமான முடிவை அடைவதற்கு நீண்டகாலம் தேவைப்படலாமெனவும் பி.பி.சி யின் செய்தியாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




'பட்டுத்துணி பற்றிய
கனவிலிருந்தபோது
கட்டியிருந்த
கோவணத்துண்டும்
களவுபோயிற்று'

'என்னமணியம் ஏதோ புதுமொழி சொல்லுகிறாய் போலை கிடக்கு...'

'இது புது மொழியில்லை கனகண்ணை வைரமுத்துவின் புதுக் கவிதை...'

'என்ன புதுக்கவிதையோ... உனக்கும் கவிதை பிடிபட்டுக்கொண்டுதோ?'

'பகிடிவிடாதை கனகண்ணை... இந்தக் கவிதைக்கு தலைப்பு என்ன தெரியுமே...! 'சுதந்திரம்' என்றதுதான்'

'சோக்காத்தான் இருக்கு கவிதை... சுதந்திர தினத்துக்கு பொருத்தமான கவிதைதான்...'

'எங்கடை சனமும் பட்டுத்துணி கனவிலைதான் அன்றைய தினத்தில் இருந்திருக்கும் நல்லவேளை கோவணம் பறிபோகமுந்தி முழிச்சபடியே மானம் போறதிலை இருந்து தப்பிட்டுதுகள்...'

'ஓமோம்... கடைசீலை எங்கடை பிள்ளையன், கோவணத்துண்டை பிடங்கவந்தவையை தங்கடை துண்டைக்காணோம் துணியைக் காணோம் எண்டெல்லே ஓடிப்போக வைச்சதுகள்... அதாலை இப்ப கௌரவமாக நிமிர்ந்து நிற்கின்றம்...'

'அது மட்டுமே கனகண்ணை... ஐந்தாறு வருசத்திற்கு முந்தி அதான்... சுதந்திர பொன்விழாவை சுதந்திரமாகக் கொண்டாட முடியாது தவிச்ச கதையும் இருக்கெல்லே...'

'ஓமோம் அடுத்தவன் சுதந்திரத்தை பறிக்க நினைச்சா சொந்த சுதந்திரத்தையும் பறிகொடுக்வேண்டித்தான் வரும்...'

'இதை சிங்கள மக்கள் தான் தங்கடை தலைவர்களுக்கு சரியான படி உணர்த்தவேணும் தெரியுமோ...'

# பாதுகாப்பு அமைச்சைப் பிரதமர் கோருவது சமாதான முயற்சிகளுக்கு தடையாகவுள்ளது

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் விடயத்தில், பொது இணக்கப்பாடு காண்பதற்கு பாதுகாப்பு அமைச்சை பிரதமர் தொடர்ந்தும் கோரி வருவது தடையாக இருப்பதாக - ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் - பிரதமருக்குமிடையில் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்வதற்கு இந்த விடயம் முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை பிரதமரிடம் ஒப்படைப்பதற்கு அரசியல் சட்டத்தில் இடம் இல்லை. அதனால், சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஐந்து யோசனைகளை ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

இந்த யோசனைகள் அனைத்தையும் பிரதமர் நிராகரித்ததுடன் இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் அதிகாரத்தைக் கோரிவருவதாக, மனோமலிக் குழுவின் பேச்சுவார்த்தை தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொலிஸ் சுட்டுக்கொலை

பொலிஸ் துணைப்படையைச் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். மேற்படி சம்பவம் நேற்றுமுன் தினம் பெலியத்த பிரதேசத்தில் இடம்பெற்றது.

வெலியத்த பிரதேசத்தில் துணைப்படை வீரர் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தசமயமே இந்தக் கொலை நடைபெற்றது. வெலியத்த சிங்கள பிரதேசத்தில் றோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்தசமயம் பொலிஸ் துணைப்படையைச் சேர்ந்த கொன்ஸ்டபிள் மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு நபர்களை சோதனைக்குட்படுத்தப்பட்ட சமயமே மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

### தடைப்பட்டுள்ள...

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கடந்த வருடம் நவம்பர் மாதம் நான்காம் திகதி பிரதமர் ரணிலின் அரசாங்கத்திடமிருந்து மூன்று அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் பிரதமர் முதற்தடவையாக வெளிநாட்டுக்குப் பயணமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தமிழகத்திலிருந்து...

நாளை தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, இவர்களை ஏற்றி வந்த இந்திய றோலர் இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அதனை உறுதி செய்ய முடியவில்லை. (113)

### சுதந்திரதின அணி...

அணிவகுப்பில் அனைத்து இராணுவப் படைப்பிரிவுகளும் கலந்துகொள்ளவுள்ளதுடன், நவீன இராணுவ தளபாடங்களும் இடம்பெறவுள்ளன.

ஆறு வருடங்களின் பின்னர் முதன்முறையாக இராணுவ தளபாடங்கள் அணிவகுப்பில் இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. யுத்தம் நடைபெற்றுவந்ததால், கடந்த ஆறு வருடங்களாக முக்கிய இராணுவ தளபாடங்கள் அணிவகுப்பில் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்த அணிவகுப்பில் பல்குழல் பீரங்கிகள், ஆட்லறிகள், டாங்கிகள் என்பனவும் இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகிறது. இந்த அணிவகுப்பில் கடற்படையினர் மரியாதை வேட்டுக்களும் தீர்க்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரதினத்தையொட்டி படையினரால் சாவகச்சேரி வைத்தியசாலை சிரமதானம்

இலங்கையின் 56ஆவது சுதந்திர தினத்தையொட்டி, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை படையினரால் நேற்று சிரமதானம் செய்யப்பட்டது.

நேற்றுக்காலை 9.00 மணிமுதல் மாலை வரை சிரமதானப் பணியில் படையினர் ஈடுபட்டனர்.

நூற்றுக்கணக்கான படையினர் வைத்தியசாலையின் வளாகத்திலிருந்த பற்றைகள், புற்களை வெட்டி அகற்றி, துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த சிரமதானப் பணியில் இராணுவ அதிகாரி மேஜர் பி.ஏ.தயானந்த, 522 ஆவது பிரிகேட்டின் கட்டளைத் தளபதி பெரேரா உட்பட படைஅதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலை விடுதியில் தங்கியருந்த நோயாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் உணவுப் பொதிகளையும் படையினர் வழங்கினர்.(29)(202)

### அமெரிக்க அதிபரின் விருந்தில்...

யரசர் சிரானி திலகவர்த்தன, காணாமற் போனோர் படையினரின் சங்கத் தலைவர் டுர்கி மார்ட்டின் ஸ்ரைன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப்பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கல்வி - மனிதவள அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, பொது ஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரா பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, சுகாதார அமைச்சர் தயாரட்ண, ஜனாதிபதி செயலக ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ், சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா மற்றும் கோரெல் கம்பனித் தலைவரான ஷருக் மரிக்கார், அவரது மனைவியும் கென்ய கம்பனி ஒன்றின் பணிப்பாளருமான நீலாமரிக்கார், பார்லீட் கம்பனி பணிப்பாளரான சுனில் விஜயசிங்கவும் அவரது மனைவியும் அடங்குகின்றனர்.

### சுதந்திர தினமான இன்று...

முன்வரவேண்டும் என பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்தள்ளன.

தென்மராட்சி, வலிவடக்கு பிரதேச சபைகளில் உயர்பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் அப்குதியிலுள்ள சொந்த வீடுகளில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் தனங்கிளப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி போன்ற பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தியும், அப்பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் முன் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதுபோன்று வலி வடக்கிலும் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி தெல்லிப்பளை பிரதேச செயலகம் முன் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது. இதேவேளை, யாழ்.செயலகம் முன் வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் சங்கம் மறியல்போராட்டத்தை நடாத்தவுள்ளது.

இதேவேளை, குடாநாட்டுக்கான சேவைகள் இன்று இடம்பெறமாட்டாது என யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கிலுள்ள ஏனைய மாவட்டங்களிலும் சுதந்திரதினத்தை பகிஷ்கரிப்பதற்கு ஏற்பாடுகளை அந்தந்த மாவட்டங்களின் பொது அமைப்புக்கள் செய்துள்ளன.

# சம்பளம் அதிகரிக்கப்படாமையினால் படையினர் அதிருப்தி அடைந்துள்ளனர்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

இராணுவத்தினரின் சம்பளங்கள் 1998 ஆம் ஆண்டின் பின் அதிகரிக்கப்படாமையால் அவர்கள் பெரிதும் அதிருப்தி அடைந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

திஸ்ஸ தெய்வேந்திரா துணைக் குழுவின் சிபார்சில் அமுல் செய்யப்படும் என அவர்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அது பூர்த்தி செய்யப்படவில்லை.

இதுபற்றி நிதி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### அத்துருகிரிய...

நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தலைமையிலான இந்த தெரிவுக் குழுவில், அரசாங்கத்தரப்பில் கருணாசேன கொடித்துவக்கு, ராஜித சேனாரத்ன, ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம் அஸ்வர், லால் தர்மப்பிரிய, கமகே, றோகித போகொல்லாகம மற்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோன் செனவிரத்ன, றோகித அபே குணவர்த்தன, மகிந்தானந்த அலுத்கமகே, சுனில் ஹந்து நெற்றி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர், எதிர்க்கட்சிகளின் தரப்பிலும் இந்தத் தெரிவுக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

அததுருகிரிய ஆயுத மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதல் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட இராணுவ விசாரணைக் குழுவினதும், ஜனாதிபதி ஆணைக்குழுவினதும் அறிக்கைகளை இந்த தெரிவுக் குழு விசாரணை செய்யவிருப்பது குறிப்பிடத்தக்கது.

### இனந்தெரியாதோரால்...

பெற்றோர் யாழ்.பொலிஸ் நிலையத்திலும், கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவிற்கும் புகார் தெரிவித்துள்ளனர். (111)

### யு.எஸ்.எயிட்...

தங்கியிருக்கும் இந்த அதிகாரி அமெரிக்க அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் உதவித்திட்டங்கள் குறித்தும் யு.எஸ்.எயிட் உதவிகள் குறித்தும் சமாதான முயற்சிகள் மாறும் பொருளாதார அபிவிருத்தி குறித்தும் கலந்துரையாடல்கள் நடத்துவார்.

இவர் பல்வேறு அரசாங்க அதிகாரிகளையும், பிரமுகர்களையும் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

### கடும் நிபந்தனைகளுடன்...

அந்த நிபந்தனைகள் விபரம் வருமாறு -

★ இந்த வழக்கை ஜூன் 30ஆம் திகதிக்குள் தினந்தோறும் விசாரித்து முடிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனால், தனக்கு அரசியல் பணிகள் இருப்பதாகக் கூறி, வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறு வைகோ கோரக்கூடாது.

★ தனக்குப் பதிலாக சட்டத்தரணிகளை நீதிமன்றத்தில் ஆஜராக அனுமதி கோரக்கூடாது.

★ சென்னை நகர்ப்பகுதியை விட்டு வெளியே செல்லக் கூடாது.

★ அனைத்து நீதிமன்ற வேலை நாட்களிலும் பொடா நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும். மற்ற நாட்களில் நகர மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும்

★ பத்திரிகை, தொலைக்காட்சிக்கு தனது வழக்குத் தொடர்பான பேட்டிகள் தரக்கூடாது. தன் சார்பில் யாரையும் பேட்டிதரவும் அனுமதிக்கக் கூடாது.

தடை செய்யப்பட்ட எந்த இயக்கத்துடனும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது.

தனக்கு எதிரான சாட்சியங்களைத் தொடர்பு கொள்ளவோ, சாட்சியங்களில் தலையிடவோ கூடாது.

தனது பாஸ்போர்ட்டையும் வைகோ நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு வைகோவுக்கு நிபந்தனைகள் விதித்த நீதிபதி, இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதாக மனு தாக்கல் செயதால் தான் பிணைமனு சாத்தியமாகும் என்று அறிவித்தார்.

# 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தை...

வற்புறுத்தி வருகின்றனர்.

மறுபக்கத்தில், இந்தியா நாடாளுமன்றத் தேர்தலை தவிர்க்கும்படி நிர்ப்பந்தித்து வருகிறது. இந்தியத் தூதுவர் நிருபன்சென் இது தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து நீண்டநேரம் கலந்துரையாடியிருந்தார்.

நாடாளுமன்றைக் கலைத்து தேர்தலை நடத்தினால், புலிகளின் கை ஓங்கிவிடுமென்று நிருபன்சென் குறிப்பிட்டிருந்தார். நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதால் புலிகள் பயனடைவார்கள் என்பதை ஜனாதிபதி சந்திரிகா உணர்ந்துள்ள போதிலும், நாடாளுமன்றத்தை கலைக்கும்படியான அதிக அழுத்தங்களுக்கு அவர் உட்பட்டிருக்கிறார்.

இந்த நிலையில் தான், இந்தியா-இலங்கையுடன் செய்து கொள்ளவிருந்த பாதுகாப்பு உடன்படிக்கையை பிற்போடத் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, இந்திய நாடாளுமன்றம் எதிர்வரும் ஆறாம் திகதி கலைக்கப்படவுள்ளது. இதனால் ஆறாம் திகதிக்குப் பின்னர் இந்தியாவில் தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கினால் இலங்கை விவகாரம் குறித்து இந்தியா அதிக கவனம் கொள்ளாது.

இதனால், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி சந்திரிகா ஆறாம் திகதிக்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம் இதன் மூலம் இந்திய அழுத்தங்களை தவிர்த்துக்கொள்ள ஜனாதிபதி முற்படலாம்.

எதிர்வரும் எட்டாம் திகதி வடமேல் மாகாணசபையைக் கலைக்கவுள்ள ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அதற்கு முன்னர் எதிர்வரும் ஏழாம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முயற்சியை எடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்தைக் கலைத்த பின்னர், மாகாணசபையைக் கலைக்கும் நடவடிக்கைக்கு சட்டரீதியான எந்தத் தடையும் இல்லை.

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி மதமாற்றத் தடைச் சட்டத்தினைக் கொண்டுவர புத்தசாசன அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு 13 நாட்களுக்கு முன்னதாக நாடாளுமன்றத்தைக் கலைக்கவே ஜனாதிபதி சந்திரிகா முடிவு செய்திருக்கிறார்.

மதமாற்றச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைத் தவிர்க்க நாடாளுமன்றத்தினை உடனடியாகக் கலைக்குமாறு கோரி பலமான போராட்டங்களை நடத்த கிறிஸதவ அடிப்படைவாதிகள் திட்டமிட்டுள்ளனர். இப்படி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அது அடிப்படைவாதிகளுக்கு பெரும் வெற்றியாக அமையும்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா, மகிந்த ராஜபக்ஷ மற்றும அநுரா பண்டாரநாயக்க - அமைச்சர்களுக்கிடையிலுள்ள இரும்புத்திரையை அகற்றுவது குறித்துப் பேச்சு நடத்த அழைப்பு விடுத்துள்ளார்.

புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டணியில் தேசிய அமைப்பாளர் பதவிக்கு அநுரா பண்டாரநாயக்க நியமிக்கப்படவிருந்த நிலையில், மகிந்த ராஜபக்ஷ எதிர்ப்புத் தெரிவித்ததால் இந்த நியமனம் குறித்த அறிவிப்பு தாமதமாகியுள்ளது.

ஜனாபதிபதி சந்திரிகா, மகிந்த ராஜபக்ஷவை அடுத்த ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளராக நிறுத்துவதற்கு திட்டமிட்டிருந்தபோதும் அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இது தனது அரசியல் எதிர்காலத்துக்கு பாதகமாக அமையும் என்று அவர் கருதுவதாகத் தெரிகிறது.

இதனால், அடுத்த பிரதமர் பதவிக்கான வேட்பாளராக லக்ஷ்மன் கதிர்காமரை நிறுத்தப்போவதாக இவர்கள் இருவருக்கும் ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு - காபந்து அரசின் பிரதமராக லக்ஷ்மன் கதிர்காமரை நியமிக்கவும் ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டுள்ளதாகவும் அந்த இணையதளம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1587 திகதி: 03.02.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| N | 3 | 9 | 4 | 9 | 0 | 0 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.